Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய அறிமுகம்! நாளைய நாகரிகம்!!
மகாராசி சில்க்ஸ்
சல்வார் கிற
இந்தியன் சாறி வகைகள்
மற்றும் சிறுவர், சிறுமியருக்கான றெடிமேட் ஆடைகள்
அனைத்திற்கும் நாடவேண்டிய இடம்
மகாராசி சில்க்ஸ்
59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்
T.P No - 0777286247

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 05 (28.01.2004) புதன்கிழமை இதழ் :119

## தற்போதைய சூழலில் எமது நிலைப்பாட்டை சர்வதேசத்துக்கு தெளிவுபடுத்த வேண்டும்!

### ஐரோப்பா புறப்பட முன்னர் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

தென்னிலங்கை அதிகார இழுப்றியால் சமாதான முயற்சிகள் பின்னடைவு கண்டிருக்கின்றன. இதனால் சமாதான முயற்சிகள் குறித்த எமது நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்தவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்று சர்வதேச நாடுகளுக்கான பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னதாக செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தப் அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அதிகார இழுபறி காரணமாக பல்வேறுவிதமான ஊகங்கள் அங்கே கிளம்பியிருக்கிறது. இந்த நிலையில் சர்வதேச சமூகம் தெளிவான நிலைப்பாட்டை அறிந்துகொள்ளாமல் அவர்கள் பாரியளவிலான உதவிகளை இலங்கைக்குச் செய்வார்கள் என்று நாங்கள் நம்பவில்லை. அவர்கள் ஒரு அழுத்தமாகப் பிரயோகித்துக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பாவுக்கான விஜயத்தை தமிழ்ச்செல்வன் ஆரம்பித்தார்!

(கிளிநொச்சி)

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வன் ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை நேற்று ஆரம்பித்தார்.

நேற்று பிற்பகல் 3.05 மணியளவில் விமானப் படைக்குச் சொந்தமான ஹெலி மூலம் கொழும்பு சென்ற அவர், அங்கிருந்து நேற்றிரவு ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்டார்.

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வனுடன் சமாதான செயலகச் செயலர் புலித்தேவன், ஜோர்ஜ் மற்றும் அலெக்ஸ் ஆகியோரும் சென்றுள்ளார்.

இவர்களை நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதன், நிதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை அரசியல் நிலைமை குறித்து ஐ.நா. செயலர் கோபி அனான் கவலை!

## விரைவில் பேச்சு ஆரம்பமாகும் என நம்பிக்கை



(நியூயோர்க்)

**இலங்கையில் தற்போது நிலவிவரும் சிக்கலான சூழ்நிலை குறித்துக் கவலை தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் - அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்பட முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.**

ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனானின் இந்தக் கருத்துத் தொடர்பாக ஐ.நா. பேச்சாளர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு நோர்வே அரசு அளித்த பங்களிப்பு மதிப்பிற்குரியதொன்று. நோர்வே அரசு விரைவில் இருதரப்புக்கும் இடையிலான சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும்.

2002 ஆம் ஆண்டில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி, யுத்த நிறுத்தத்தை மிகவும் அக்கறையுடன் இருதரப்புக்களும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சை ஆரம்பிக்கக் கோரி கையெழுத்து வேட்டை!

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கவும், விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தினை வழங்கவேண்டும் என்று வலியுறுத்தியும் குடாநாட்டு மக்களின் கையெழுத்து திரட்டப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய பாதுகாப்பை கருத்தில் கொள்ளாது இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது!

### சோமவன்ச அமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படும்போது மூன்று விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

நேற்று மாலை அனுரா பண்டாரநாயக்கவுடன் பேச்சு நடத்திய சோமவன்ச அமரசிங்க தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

தேசிய பாதுகாப்பு , நாட்டின் இறைமை மற்றும் பிராந்திய பாதுகாப்பு ஆகிய மூன்று விடயங்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

இதில் தேசிய பாதுகாப்பு மற்றும் பிராந்திய பாதுகாப்பு என்பனவற்றைக் கருத்தில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் நெருக்கடி தீர்ந்ததும் சமாதான முயற்சியில் நோர்வே!

### தூதுவர் பிரட்ஸ்கர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

அரசியல் முரண்பாடுகள் நிலவவுதால்தான் சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வே தற்காலிமாக வெளியேறியிருக்கிறது. தென்னிலங்கை அரசியல் முறுகலுக்கு தீர்வு காணப்பட்டவுடன் சமாதான முயற்சிகளில் நோர்வே அரசு, ஏற்பாட்டாளர் பணியில் தொடர்ந்தும் ஈடுபடும் என்று இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று நடந்த கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

தென்பகுதியில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையுடனான பாதுகாப்பு ஒப்பந்தம்; இராணுவச் சமநிலையைப் பாதிக்காது!

### இந்திய பேராசிரியர் கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் இராணுவச் சமநிலையைப் பாதிக்கும் என்பது, இராணுவ ஒப்பந்தம் வரைவதைப் பொறுத்தே அமையும். தற்போதைய நிலவரப்படி, இந்திய - இலங்கை இராணுவ ஒப்பந்தம் பெரியளவில் இருக்காது.

இவ்வாறு புதுடெல்கியில் உள்ள ஜவர்கல்லால் நேரு பல்கலைக்கழக தெற்காசியப் பிராந்தியத்துக்கான பேராசிரியர் சகாதேவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த ஒப்பந்தம் அடிப்படை மட்டத்திலானதாக இருக்கும். இதனால் இராணுவச் சமநிலை பாதிக்கப்படும் என ஐயப்படவேண்டியதில்லை.

ஆயுதங்களை இப்பொழுதும் இந்தியா கொடுத்து வருகின்றது. இலங்கை அரசாங்கம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### அத்துருகிரிய தேடுதலுடன் சம்பந்தப்பட்ட

## பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் பரிந்துரை!

(கொழும்பு)

அத்துருகிரிய இராணுவ மறைவிடத்தில் நடத்தப்பட்ட தேடுதல் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள் மீது பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைத்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றும் உதவியளித்த இராணுவ அதிகாரிகள் மீது இராணுவத் தளபதி ஒழுங்கு நடவடிக்கை எடுத்ததை அடுத்தே பொலிஸ் மா அதிபரும் பொலிஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்துள்ளார்.

பொலிஸ் அதிகாரி ஒருவர் இது குறித்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email:-jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெறும் குடும்பங்களின் தொகை அதிகரிப்பு!

## நிகொட் அதிகாரி தெரிவிப்பு

யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுவரும் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு இந்த ஆண்டு கூடுதலான குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளதாக நிகொட் நிறுவனத்தின் யாழ். மாவட்டப் பெருந் திட்டமிடல் அதிகாரி கே.நவரத்தினராஜா தெரிவித்தார்.

யாழில் மீளக்குடியமர்ந்த எத்தனை குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதெனக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த ஆண்டு மட்டும் யாழில் மீளக்குடியமர்ந்த 40 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்களில் - இது வரை 18 ஆயிரத்து 200 குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது.

கடந்த ஆண்டுக்குரிய பட்டியலின்படி, இன்னமும் 5 ஆயிரத்து 457 பேருக்கு முதல் கட்டமாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. தொடர்ந்து ஏனையோருக்கும் இந்த உதவி வழங்கப்படும்.

இந்த நிதியுதவியை வழங்குவதற்கு கடந்த ஆண்டு 400 மில்லியன் ரூபா வரை ஒதுக்கப்பட்டது. எனினும், இந்த வருடம் அந்த நிதியைவிட மேலும் கூடுதலான தொகை தேவைப்படுவதாகத் தெரிவித்திருக்கிறோம்.

அந்த நிதி கிடைக்கப்பெற்றதும், இந்த உதவித் தொகை வழங்கும் பணி ஆரம்பமாகுமென அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# கட்டட உற்பத்தியாளருக்கு விசேட கருத்தரங்கு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வர்த்தக தொழில் துறை மன்றமும் யூனியன் அஷூரன்ஸ் நிறுவனமும் இணைந்து - கட்டட உற்பத்தியாளர்கள் மற்றும் பொது விற்பனை முகவர்களுக்கான விசேட கருத்தரங்கொன்றை நடத்தவுள்ளது.

பொதுக் காப்புறுதி சம்மந்தமான விடயங்கள் மற்றும் விற்பனை முகவர்கள், கட்டட உற்பத்தியாளர்களுக்கான காப்புறுதித் திட்டங்கள் தொடர்பாக இதில் கலந்துரையாடப்பட்டு வருகின்றன.

இந்த விசேட பயிற்சிப் பட்டறையானது - நாளை பி.ப 2.30 மணிக்கு யூறோவில் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் விசேட அதிதியாக யூனியன் அஷூரன்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் பொது முகாமையாளர் அயின்ஸ்லி அலெக்ஸ் கலந்துகொள்வார். (ப)

# மகனுக்கு தண்டனை வழங்காத பொலிஸ் அதிகாரி மீது புகார்!

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

தன்னைத் தாக்கிய மகனுக்கு சரியான தண்டனை வழங்காமையைக் கண்டித்து - மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கெதிராக தந்தை ஒருவர் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

சுதுமலை வடக்கு - மானிப்பாயைச் சேர்ந்த வினாசித்தம்பி கேதீஸ்வரன் (வயது 71) என்பவரே முறைப்பாடு செய்துள்ளார். அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 19 ஆம் திகதி நள்ளிரவில் வீட்டினுள புகுந்த அவரது மகன் தந்தையாரது மரவள்ளித் தோட்டத்தில் உள்ள கிழங்குகளைத் தான் பிடுங்கி விற்கப்போவதாகக் கேட்டுள்ளார்.

இதனைத் தந்தை மறுக்கவே, ஆத்திரமுற்ற மகன் தந்தையாரை முதியவரென்றும் பார்க்காமல் நிலத்தில் தள்ளிப் பலமாகத் தாக்கியுள்ளார். பின்னர் அவரை அறையில் வைத்துப் பூட்டிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்.

தந்தையாரது கழுத்து உடம்பு எனப் பல இடங்களிலும் தாக்கியதால் ஏற்பட்ட வலி தாங்கமுடியாது அலறியதுடன் பெரும் சத்தமிட்டுக் கத்தியதால், அயலவர்கள் வந்து பூட்டிய கதவைத் திறந்து அவரை மீட்டுள்ளனர்.

மறுநாள் காலை இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் அவரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், இதுவரையில் இது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் பொலிஸாரால் மேற்கொள்ளப்படவில்லை.

தொடர்ந்தும் தனது மகன் தனக்கு அச்சுறுத்தலாகச் செயற்பட்டு வருவதால், இது தொடர்பாக' மனித உரிமை ஆணைக்குழுவினர் தகுந்த நடவடிக்கை எடுத்து தனக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு முறைப்பாட்டில் தெரிவித்தார். (ப)

## எரிபுழுவினால் தாக்கம்

இறால் தொழிலில் ஈடுபட்ட ஒருவர் எரிபுழுவினால் தாக்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு, ஆழியவளையைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவநேசன் என்பவர் கடலில் இறால் தொழிலில் ஈடுபட்டிருந்தபோது, அவா மீது எரிபுழு படர்ந்து கொண்டதால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார். (122)

# ஆயிரம் ரூபா கள்ளநோட்டுக்கள் யாழ். குடாநாட்டில் புழக்கத்தில்!

## மக்களை விழிப்பாக இருக்கக் கோரிக்கை

யாழ். குடாநாட்டில் ஆயிரம் ரூபாய் கள்ளநோட்டுக்கள் புழக்கத்தில் விடப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றும், நேற்றுமுன்தினமும் இத்தகைய போலி நோட்டுக்கள் பல வங்கியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தாள் நாணயங்களை பரிசோதிக்கும் கருவி மூலமே - இந்தப் போலி நோட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே சாதாரண புழக்கத்தின்போது, மக்கள் இந்தக் கள்ள நோட்டு விடயம் தொடர்பாக விழிப்பாக இருக்குமாறு வங்கி அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சட்டவிரோதமான முறையில் அச்சிடப்பட்டுள்ள இந்த நோட்டுக்களில் சிங்க இலட்சினை வேறு ஒரு எழுத்தும் கருவியைப் பயன்படுத்தி பதியப்பட்டுள்ளதாகவும், அது வெளியே தெரியாதவாறு, பேனாக்களால் அதில் கிறுக்கப்பட்டுள்ளதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே, இவ்வாறான நோட்டுக்கள் தொடர்பாக மக்கள் அவதானமாக இருக்குமாறும் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் உரிய இயந்திரங்கள் மூலம் நாணயங்களை பரிசோதிக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

இவ்வாறான போலி நோட்டுக்களை புழக்கத்தில் விட்டுள்ளவர்கள் தொடர்பாக, ஏதேனும் தகவல் தெரிந்தால் உடனடியாக பொலிஸாருக்கு தெரியப்படுத்துவதன் மூலம், மேலும் இந்த நோட்டுக்கள் பரவுவதனை தடுக்கமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


## தேவை

தச்சு, உலோக ஒட்டு வேலைக்கு உடனடியாக ஆட்கள் தேவை. திறமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். நேரில் வரவும்.
நரீன் தளபாட நிலையம், 273, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
(சி-2173)

திரைஞ்சனாலி சங்கானை
ஷாம், குட்டி ராதிகா நடித்த
இயற்கை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
HULK
பெரியோர், சிறியோர் ஒன்றாகப் பார்க்கக்கூடியது
(சி-2004)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா
நடித்த
ஜெய்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-2005)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 - 12 - 1956 | 29 - 12 - 2003 |



அமரர்

**திருமதி. சரோஜா முத்துக்குமாரசாமி**

29.12.2003 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (28.01.2004) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம் மற்றும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் எம் அழைப்புத்தவறியவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

94, கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்

(608)


## வழங்குநர்களை பதிவுசெய்தல்

பனை அபிவிருத்திச் சபைக்கு பனைசார் உற்பத்திப் பொருட்களை வழங்க விரும்பும் உற்பத்தியாளர்கள் பனை அபிவிருத்திச் சபையின் தலைமைக் காரியாலயத்தில் தங்களை வழங்குநர்களாகப் பதிவு செய்துகொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*தொடர்பு முகவரி :-*
பனை அபிவிருத்திச் சபை,
53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2175)

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

# சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்

DAIDO

உங்களின் சிறந்த தெரிவுகளுக்கு எங்களின் காட்சியறைக்கு வாருங்கள்

உந்துருளி விற்பனையில் முன்னணி வகிக்கும் நிறுவனம்





நாயகி கட்டடம்
பரந்தன் சந்தி அருகாமை,
யாழ். சாலை,
கிளிநொச்சி.

# வட-கிழக்கு தமிழ் கட்சிகளுடன் கூட்டணியா? ஆறுமுகம் தொண்டமான் கண்டனம்!

## சந்திரசேகரன் மீது குற்றச்சாட்டு



வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ்க் கட்சிகள் மற்றும் மலையகக் கட்சிகள் ஒனறிணைந்து, தேர்தலில் போட்டியிடவேண்டும் என்று, மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி.சந்திரசேகரன் கூறிய கருத்தை- இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொணடமான் கண்டித்தார்.

கடந்தவாரம் கிளிநொச்சிக்குச் சென்றிருந்த அமைச்சர் சந்திரசேகரன் - அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இதன்பின்னர் அமைச்சர் சந்திரசேகரன் கருத்துத் தெரிவிக்கையில்- அனைத்துக் கட்சிகளும் ஒரேயணியில் இணைந்து, தேர்தலை எதிர்கொள்ளவேண்டும் எனக் கோரியிருந்தார்.



அமைச்சர் சந்திரசேகரனின் இந்தக் கருத்துக் குறித்து, பதுளையில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றியபோதே, அமைசசர் தொண்டமான் இந்தக் கண்டனத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்-

இப்படியானதொரு கூட்டணி அவசியமற்றதொன்று, வடக்கு-கிழக்குப் பிரச்சினை தனியான தொரு விடயம். இதனால், வடககு- கிழக்கு மற்றும் மலையகக் கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிடவேண்டிய அவசியமில்லை. அமைச்சர் சந்திரசேகரன் - மலையகக் கட்சிகளைத் தவறாக வழிநடத் துகிறார்.

அவர் அரசியலில் மலிவாக. இலாபம்தேட முற்படுகிறார் என்றும் ஆறுமுகம் தொண்டமான் மேலும் தெரிவிததார்.

## துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் பலி

நேற்றுக்காலை இனந்தெரியாத நபர்கள் - துப்பாக்கி பிரயோகம் செய்ததில், முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் கொல்லப்பட்டார். மேற்படி கொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டவேளை, துப்பாக்கிப் பிரயோகம் செய்த நபரைக் கைதுசெய்ய முயற்சித்தவேளை, தப்பியோட முயற்சித்தார். இதன்போது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் அந்த நபரும் கொல்லப்பட்டார். (01)

# புதிய கூட்டணியில் மேலும் பல கட்சிகள்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பி.யும் இணைந்து உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் வேறுபல கட்சிகளும் இணையவுள்ளன.

29 ஆம் திகதி நடைபெறும் இந்தக் கட்சிகளின் பொதுக் கூட்டத்தில் - மக்கள் ஐக்கிய முன்னணி, ஜாதிக சமகி பெரமுன, சிறிலங்கா மக்கள் கட்சி, தேச விமுக்தி ஜனதா கட்சி என்பன ஒன்றிணையவுள்ளன.

கொழும்பில் நடைபெறும் இந்தக் கட்சிகளின் பொதுக் கூட்டத்தில், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொள்வர் என, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

## ஐந்தாம்தரப் புலமைப் பரிசில் பரீட்சையில்

# இம்முறை முதல் பத்து இடங்களையும் கிராமப்புற மாணவர்களே பெற்றனர்

(கொழும்பு)

கடந்தவாரம் வெளியான ஐந்தாம்தரப் புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் - முதல் பத்து இடங்களையும் கிராமப்புறப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களே பெற்றிருப்பதாகப் பரீட்சை ஆணையாளர் மகிந்த விஜேசிறி தெரிவித்தார்.

சிங்களமொழிமூலப் பரீட்சையில், கேகாலை மத்துமகொட ரத்னவலி மகா வித்தியாலய மாணவி 193 புள்ளிகளையும், கொங்கம சுமேதா ஆரம்பப் பாடசாலை மாணவி 192 புள்ளிகளையும், கேகாலை அனுலா தேவி பாலிகா வித்தியாலய மாணவி 191 புள்ளிகளையும், ஹோமகம சுபாரதி ஆரம்பப் பாடசாலை மாணவி 190 புள்ளிகளையும் பெற்றனர்.

ஐந்தாம் இடத்தைக் கோட்டை தர்மபால மகா வித்தியாலயத் தைச் சேர்ந்த மாணவியும் பெற்றார்.

ஏனைய ஐந்து இடங்களையும் ஹோமகம, கம்பகா, ரத்கம, அளவ்வ தயமத்தலாவ ஆகிய இடங்களைச் சேர்ந்த மாணவர்கள் பெற்றுள்ளனர். இம்முறை சிங்களமொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில், முதல் எட்டு இடங்களையும் மாணவிகளே பெற்றுள்ளனர் எனவும் பரீட்சை ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

# ஆசிரிய இடமாற்றங்கள் ஏப்ரல் விடுமுறையில்!

(கொழும்பு)

தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்கான வருடாந்த இடமாற்றங்களை - ஏப்ரல் விடுமுறைக் காலத்தில் நடைமுறைப்படுத்த, கல்வி அமைச்சு திட்டமிட்டிருக்கிறது.

இது தொடர்பாகக் கல்வி அமைச்சு வட்டாரங்கள் தகவல் தருகையில் - கஷ்டப் பிரதேசங்களில் பணிபுரிந்த ஆசிரியர்கள் - இந்த இட மாற்றத்தில் முன்னுரிமை கொடுத்துக் கவனிக்கப்படுவர். ஏனைய இடமாற்றங்கள் பொருத்தமான வெற்றிடத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும்.

மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களுக்கு வெற்றிடம் இல்லை என்றும், கல்வி அமைச்சின் செயலாளர் வி.கே. நாணயக்கார தெரிவித்தார்.

## கடந்த ஆண்டில் மட்டும்

# ஐந்து லட்சம் உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்தனர்

(கொழும்பு)

கடந்த வருடம் இலங்கைக்கு ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் வருகை தந்துள்ளதாக, இலங்கை உல்லாசப் பிரயாணசபை தெரிவிக்கிறது.

இதற்கு முன்னைய வருடங்களில், சுமார் ஒரு இலட்சம் உல்லாசப் பிரயாணிகள் கடந்த வருடம் இலங்கைக்கு வந்தனர்.

ஆகக்கூடுதலாக பிரிட்டனிலிருந்து 93 ஆயிரம் உல்லாசப் பிரயாணிகளும், இந்தியாவிலிருந்து 90 ஆயிரம் பேரும் கடந்த ஆண்டு இலங்கைக்கு வந்தனர்.

அத்துடன் ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்ரேலியா, இத்தாலி, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளிலிருந்தும் கடந்த வருடம் அதிகளவிலான உல்லாசப் பிரயாணிகள் இலங்கைக்கு வந்திருந்தனர்.

இதையடுத்து, இந்த வருடத்தில் மேலும் அதிகளவிலான உல்லாசப் பிரயாணிகளை இலங்கைக்கு அழைத்துவருவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதாக, உல்லாசப் பிரயாணிகள்சபை திட்டமிட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தில், உல்லாச விடுதிகளை ஒழுங்குசெய்து கொடுப்பதும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்டம் வடக்கு - கிழககு உள்ளிட்ட, நாட்டின் அனைதுப் பகுதிகளிலும் அமுல் படுத்தப்படவுள்ளது.

# ஜே.வி.பி. உறுப்பினர்களின் முறையீடு உயர் நீதிமன்றத்தால் நிராகரிப்பு

வர்த்தக, பாவனையாளர் விவகார அமைச்சர் ரவி கருணா நாயக்கவுக்கு எதிராக - உயர்நீதிமன்றத்தில் ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள், நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டன.

அமைச்சர் ரவி கருணாநாயக்க - 500 மில்லியன் ரூபா மானநஷ்டஈடு வழங்குமாறு உத்தரவிடக்கோரி, ஜே.வி.பி. பிரசார செயலர் விமல் வீரவன்ச மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெற்றி ஆகியோருக்கு எதிராகக் கொழுமபு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

தனது நற்பெயருக்கு ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியிட்ட அறிக்கைகள், களங்கத்தை ஏற்படுத்தியதாகவும் அமைச்சர் ரவி கருணாநாயக்க தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கு - கொழும்பு மாவட்ட நீதிமன்ற விசாரணைகளிலிருக்கும் நிலையில் - இது திருப்தியற்றதெனக் கூறி, உயர் நீதிமன்றில் ஜே.வி.பி உறுப்பினர்கள் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுவையே உயர்நீதிமன்ற நீதிபதிகள் நிராகரித்தனர்.



கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குடியரசுதின வைபவத்தில் அணிவகுப்பு மரியாதையை இந்தியத் தூதுவர் நிருபம் சென் பார்வையிடுகிறார்.

# இலங்கை தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை

## இந்தியத் தூதுவர் நிருபம் சென் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டில் எந்த விதமாற்றமும் ஏற்படாது என்று, இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் நிருபம் சென் தெரிவித்தார்.

இந்தியாவின் 55 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை - இந்திய ஒருமைப்பாட்டை பாதுகாக்க, இந்தியா தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் எனவும்,

இலங்கை குறித்து அரசியற் கொள்கையிலும், நிலைப்பாட்டிலும் எந்தவித மாற்றமும் ஏற்படாது.

இதன்படி இலங்கையின் இறையாண்மை, ஒருமைப்பாடு, ஐக்கியம் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்குத் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவோம்.

பேச்சுவார்த்தைமூலம் தற்போது நிலவும் பிரச்சினைக்கு அமைதியான தீர்வொன்றைக் காண்பதற்கு முயற்சி செய்வதே முக்கியத்துவம் பெறும் விடயமாகும்.

இதன்போது எட்டப்படும் தீர்வுகள் - அனைத்து இனமக்களுக்கும் நியாயமானதாக இருக்கவேண்டும்.

அத்துடன், ஜனநாயக மனித உரிமைகள் ஆகியவற்றை மதிக்கும் தீர்வாகவும் அமையப்படவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இனந்தெரியாதோரின் சூட்டுக்கு இரண்டு பொலிஸார் படுகாயம்!

## வெள்ளவத்தையில் சம்பவம்

வெள்ளவத்தையில் நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், இரண்டு பொலிஸார் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை 7 மணியளவில் - வெள்ளவத்தை ஜப்பர் லான்டில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

மோட்டார்சைக்கிள் ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், அந்தப் பகுதியில் கடமையிலிருந்த இரு பொலிஸார் காயமடைந்தனர். இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக களுபோவில வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (01)

# பிரதேச சபைத் தலைவருக்கு விளக்க மறியல் உத்தரவு!

(கொழும்பு)

ஜே.வி.பி. உறுப்பினர்கள் மறறும் பொலிஸாரைக் கடந்தவாரம் தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் திஸ்ஸமகராமப் பிரதேச சபையின் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவருமான அசோக வீரசிங்கவும், மேலும் ஒன்பது பேரும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நீதிவான் மு[illegible] இவர்களை ஆஜர் செய்த கதிர்காமம் பொலிஸார் - சந்தேகநபர்கள் கடந்த 20 ஆம் திகதி கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையிலதான், ஜே.வி.பி. உறுப்பினர்கள் மற்றும பொலிஸாரைத் தாக்கியதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

ஜே.வி.பி. - சுதந்திரக்கட்சி கூட்டணி உடன்பாடு கையெழுத் தான தினத்தன்றே, இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவு பிரதேச செயலக மட்ட விளையாட்டு இறுதி போட்டிகள்

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவில், பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 2004 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வுகள் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 2.30 மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ச. பேரானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ்.செல்வநாயகம் கலந்துகொள்வார்.

இறுதிநாள் நிகழ்வுகள் கழகங்களின் அணிவகுப்பு இடம்பெறவுள்ளதுடன் 100 மீற்றர் ஆண்கள், பெண்கள் இறுதிப்போட்டி, 200 மீற்றர் ஆண், பெண் இறுதி போட்டிகளும் இடம்பெறும்.

இடைவேளை நிகழ்வாக நெடுந்தீவில் உள்ள மூன்று உயர்தரப் பாடசாலைகளின் பாண்ட் வாத்திய இசைநிகழ்வும் அதனைத் தொடர்ந்து 400 மீற்றர் ஆண், பெண் இறுதிப் போட்டி 4 x 400 அஞ்சல் ஆண், பெண் இறுதி போட்டி ஆகியனவும் பரிசில் வழங்கலும் இடம்பெறவுள்ளது.

போட்டியில் கலந்துகொள்ளும் சகல வீரர், வீராங்கனைகளையும் குறிப்பிட்ட நேரத்திற்கு வருகை தந்து இறுதிநாள் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நெடுந்தீவு பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் சகல கழக நிர்வாகத்தினையும் கேட்டுள்ளார். (113)

# சதுரங்கச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விபரம்

யாழ்ப்பாண சதுரங்க சம்மேளனத்தினால், அண்மையில் மாபெரும் சதுரங்கச் சுற்றுப்போட்டியொன்று நடத்தப்பட்டது.

இந்தப் போட்டிகள் அனைத்தும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் - முதலாமிடத்தை வி.ரி.எஸ். வித்தியாதரன் பெற்றார்.

இரண்டாம், மூன்றாம் இடங்களை என்.சோதிநாதன், எஸ். இராதாகிருஷ்ணன் ஆகியோர் பெற்றனர்

நான்காம் இடத்தை எஸ்.சிறிபிரசன்னாவும், ஐந்தாம் இடத்தினை ரி.இராஜசிங்கமும், ஆறாம் இடத்தை ஏ.கோசலராஜனும், ஏழாமிடத்தை ஏ.மோகனும், எட்டாமிடத்தை எஸ்.திருச்செல்வமும் பெற்றனர்.

இந்தச் சுற்றுப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் - யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் இடம்பெற்றது.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளைப் பேராசிரியர் என். ஞானக்குமரன், சிரான் இணைப்பாளர் எஸ்.இரத்தினம், கே. ஞானசீலன் ஆகியோர் வழங்கினர்.

## விளையாட்டு

# சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தில் ஊழல் துணைத் தலைவர் பதவி நீக்கம்!

சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் துணைத் தலைவர் கிம் யூன் யாங் லஞ்சம் வாங்கியதாக சர்ச்சையில் சிக்கி, தனது பதவியை இழந்தார்.

சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் துணைத் தலைவராக பொறுப்பு வகித்தவர் கிம் யூன் யாங் (72) தென்கொரியாவைச் சேர்ந்த கிம் அந்த நாட்டு ஒலிம்பிக் சங்கத்திலும் முக்கியப் பொறுப்பு வகிக்கிறார்.

இவர் மீது கடந்த வாரம் ஊழல் குற்றச்சாட்டு கிளம்பியது. தென் கொரியாவை ஒலிம்பிக் சங்கத்தில் பதவி வாங்கித் தருகிறேன் என்று உறுதியளித்து அந்த நாட்டு வர்த்தகப் பிரமுகரிடம் இருந்து பல கோடி அளவுக்கு பெரும் தொகையை லஞ்சமாகப் பெற்றதாக குற்றச்சாட்டு கிளம்பியது.

இது சம்பந்தமாக விசாரித்த தென் கொரிய அதிகாரிகளுக்கு மேலும் ஒரு அதிர்ச்சி. இன்னும் நிறைய முறைகேடுகள் கிம் மீது அடுத்தடுத்துக் கிளம்பின. கொரிய ஒலிம்பிக் சங்கத்தில் உள்ள பல உறுப்பினர்கள், தங்கள் பதவியைத் தக்க வைத்துக்கொள்வதற்காக அவ்வப்போது லஞ்சம் கொடுத்திருப்பதாகவும் தெரியவந்தது.

இதையடுத்து, கிம் யூன் யாங்கைக் கைது செய்து விசாரிக்க முடிவு செய்தனர். போலீஸ் கைது செய்யப் போகிறார்கள் என்று தெரிந்ததும் அதிர்ச்சியில் உடல் நலம் பாதிக்கப்பட்ட கிம் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

அவர் குணமடைந்து திரும்பியதும், விசாரணையைத் துவக்க தென் கொரிய அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். இதற்கிடையே, கிம் யூன் யாங் மீது சுமத்தப்பட்டிருக்கும் ஊழல் குற்றச்சாட்டு, சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.



துணைத் தலைவர் போன்ற முக்கியப் பொறுப்பில் இருக்கும் ஒருவர் மீதே லஞ்ச குற்றச்சாட்டு கிளம்பியிருப்பதால் அதிருப்தி கிளம்பியுள்ளது. துணைப் தலைவர் பொறுப்பில் இருந்து கிம் யூன் யாங்கை உடனடியாக பதவி நீக்கம் செய்ய உத்தரவிட்டுள்ளார், சர்வதேச ஒலிம்பிக் சங்கத் தலைவர் ஜாக்ஸ் ரோகி.

# வைகோவின் வழக்கறிஞர்கள் நீதிமன்றிலிருந்து வெளி நடப்பு!

வைகோவின் பிணை மனு மீதான விசாரணையை, நீதிமன்றம் தள்ளி



வைத்ததால் கோபமடைந்த வைகோவின் வழக்கறிஞர்கள் - ஒட்டுமொத்தமாக நீதிமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இதனால், வைகோ மற்றும் 8 ம.தி.மு.க.வினர் மீதான பொடா வழக்கு விசாரணை நேற்று பாதியிலேயே நின்றுபோனது.

பிணை கோரி, வைகோ தாக்கல் செய்த மனுமீது கடந்த 21 ஆம் திகதி விசாரணை நடந்தது. அப்போது வைகோ தனக்காகத்தானே வாதாடினார்.

இதைத் தொடர்ந்து, அரச தரப்பில் அரசின் தலைமை வழக்கறிஞர் என்.ஆர்.சந்திரனே நேரில் வந்து வாதாடுவார் என, அரச வழக்கறிஞர் ஜெயக்குமார் கூறினார்.

இதையடுத்து, வழக்கு விசாரணையை 22 ஆம் திகதிக்கு நீதிபதி ராஜேந்திரன் ஒத்திவைத்தார்.

ஆனால், சந்திரனுக்கு வேறு பணிகள் இருப்பதால், அவரால் 27 ஆம் திகதிதான் வரமுடியும் என ஜெயக்குமார் கூறினார். இதையடுத்து, வழக்கை நேற்றுவரை நீதிபதி ஒத்திவைத்தார்.

வைகோவுக்கு எளிதில் பிணை கிடைத்துவிடக் கூடாது என்பதற்காக, இழுத்தடிப்புச் செய்யவே 27 ஆம் திகதிவரை நீதிமன்றத்தில் ஆஜராகாமல், சந்திரன் தவிர்ப்பதாக ம.தி.மு.க. வழக்கறிஞர்கள் அன்றே குற்றஞ்சாட்டினர்.

இந்த நிலையில், வைகோவின் பிணை மனு மீது நேற்றுக்காலை விசாரணை தொடங்கியிருக்க வேண்டும். இதற்காக வேலூர்ச் சிறையிலிருந்து வைகோவும் அழைத்து வரப்பட்டிருந்தார்.

ஆனால், அரசு தலைமை வழக்கறிஞர் சந்திரன் - நீதிமன்றத்துக்கு வரவில்லை.

ஆனால், அரச தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஜெயக்குமார் - தலைமை வழக்கறிஞரால் காலையில் இங்கு வரமுடியவில்லை. இதனால், வைகோவின் பிணை மனு மீதான விசாரணையைப் பிற்பகல் 2.30 மணிவரை ஒத்திவைக்குமாறு நீதிபதியிடம் கோரிக்கை விடுத்தார்.

மேலும், அதுவரை வைகோ மற்றும் 8 ம.தி.மு.க.வினர் மீதான பொடா வழக்கில் சாட்சிகளை விசாரித்துக் கொண்டிருக்கலாம் என்றார். இதை நீதிபதியும் ஏற்றுக்கொண்டார்.

இதனால், கோபமடைந்த வைகோவின் வழக்கறிஞர்கள் ஒட்டுமொத்தமாக நீதிமன்றத்தைவிட்டு வெளிநடப்புச் செய்தனர். வெளியே அரசுக்கு எதிராக அவர்கள் கோஷமெழுப்பினார்கள்.

இதனால், சாட்சிகளை விசாரிக்க முடியாத சூழல் உருவானது. இதையடுத்து, பேசிய நீதிபதி ராஜேந்திரன் - வைகோ தரப்பு வழக்கறிஞர்களின் செயலால், நீதிமன்றத்தின் பணிகளை பாதித்துவிட்டது என்றார்.

அப்போது பேசிய வைகோ - அரச தரப்பில் வேண்டுமென்றே செய்யப்படுகின்ற தாமதங்களைக் கண்டித்தே எனது வழக்கறிஞர்கள் வெளியேறியுள்ளனர். அவர்களது வெளிநடப்புக்கான காரணத்தை என்னால் உணரமுடிகிறது என்றார்.

இதையடுத்து, நீதிபதி கூறுகையில், நீதிமன்றத்தின் மரபுகளை நாம் கடைப்பிடித்துத்தானே ஆகவேண்டும். உங்கள் வழக்கறிஞர்கள் வெளிநடப்புச் செய்துள்ள நிலையில், நீங்கள் தொடர்ந்து நீதிமன்றத்திலேயே அமர்ந்துள்ளது எனக்கு மகிழ்ச்சி தருகிறது என்றார்.

பிணை மனு மீதான விசாரணையும், சாட்சிகளின் விசாரணையும் பிற்பகலில் நடக்கும் என்றும் அறிவித்தார். சந்திரனின் வாதத்தைத் தொடர்ந்தே வைகோவின் பிணை கோரிக்கை மீதான முடிவை நீதிபதி அறிவிப்பார்.

# பா. ம. கட்சிக்கு எதிராக களமிறங்கும் ரஜினி ரசிகர்கள்

பாட்டாளி மக்கள் கட்சிக்கு எதிராக தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட ரஜினி ரசிகர்கள் திட்டமிட்டுள்ளனர். இதற்காக அனைத்து ஊர்களிலும் அவர்கள் அணி சேர்த்து வருகிறார்கள்.

பாபா திரைப்பட வெளியீட்டின் போதும், அதைத் தொடர்ந்தும் நடிகர் ரஜினிகாந்திற்கு எதிராக மிகக் கடுமையாக விமர்சனம் செய்து பேசினார் பா.ம.க. நிறுவுநர் டொக்டர் ராமதாஸ்.

இதனால், பாபா படத்தை திரையிட முடியாமல் பல இடங்களிலும் தடங்கல் ஏற்பட்டது. ராமதாஸின் வலதுகரமான காடுவெட்டி குரு தலைமையிலான படை தியேட்டர்களில் நுழைந்து இயக்குனர்களை தாக்கிவிட்டு படப் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு போனது.

ரஜினியை பா.ம.க. வினர் மிகக் கடுமையாக விமர்சனம் செய்தால் தமிழகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. நடிகர் ரஜினியும், ராமதாஸுக்கு நேரடியாக பதில் சொல்ல விரும்பவில்லை. நேரம் வரும்போது பார்த்துக் கொள்கிறேன் என்று பொதுவாக கூறி விஷயத்தை பெரிதுபடுத்தாமல்விட்டுவிட்டார்.

இந் நிலையில் தற்போது தி.மு.க. கூட்டணியில் மீண்டும் பா.ம.க. இடம் பெற்று 6 எம்.பி. தொகுதிகளில் போட்டியிடவுள்ளது. இந்தத் தேர்தலை பழி தீர்த்துக் கொள்ள பயன்படுத்துவதில் ரஜினி ரசிகர்கள் தீவிரமாக உள்ளனர்.

1996 ஆம் ஆண்டு நடந்த சட்டசபைத் தேர்தலில் ரஜனியின் ஆக்ரோஷமான அறிக்கை மற்றும் பேச்சுக்களின் காரணமாகவே ஜெயலலிதா மிகப் பெரிய தோல்வியையும், தி.மு.க. வரலாறு காணாத வெற்றியையும் பெற்றது.

இந்த நிலையில் ரஜினியை, ராமதாஸ் மிகக் கடுமையாக விமர்சித்ததை மறந்துவிட்டு அவருக்கு கூட்டணியில் முக்கிய இடத்தை தி.மு.க. கொடுத்துள்ளது. ரஜினி ரசிகர்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதனால், பா.ம.க. வின் தோல்விக்காக கடுமையான பிரச்சாரத்தில் ஈடுபட ரஜினி ரசிகர்கள் முடிவு செய்துள்ளனர். வட மாவட்ட ரஜினி ரசிகர்கள் மட்டுமன்றி தென் மாவட்டங்களிலும் இந்த முறை தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிக்கக் கூடாது என்று ரஜினி ரசிகர்கள் முடிவுசெய்துள்ளனர்.

மேலும், தங்களது தொகுதியில் போட்டியிடும் நல்ல வேட்பாளர்களை ஆதரித்து தீவிர பிரசாரம் செய்யவும் ரஜினி ரசிகர்கள் திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

பா.ம.க. வை ஒரு இடத்தில் கூட வெற்றிபெறவிடக் கூடாது என்பதற்காக அது போட்டியிடும் தொகுதிகளில் ரஜினி ரசிகர்கள் கடுமையாக பாடுபடப் போவதாகவும் ரசிகர்கள் உறுதியாக தெரிவிக்கிறார்கள்.

ஆனால், அவர்களை ரஜினி கட்டுப்படுத்திவிடுவார் என்ற நம்பிக்கையில் உள்ளது தி.மு.க. தலைமையிலான அணி. தேவைப்பட்டால் ரஜினியுடன் தி.மு.க. சார்பில் பேச்சு நடத்தவும் வாய்ப்புள்ளது.

# பெப்ரவரி முதலாம் திகதிக்குள் தொகுதிப் பங்கீடு முடிவுறும்!

## கருணாநிதி தெரிவிப்பு

நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க உட்பட கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகள் போட்டியிடும் இடங்களின் எண்ணிக்கை வரும் 31 ஆம் திகதிக்குள் அறிவிக்கப்பட்டுவிடும். பெப்ரவரி முதலாம் திகதி போட்டியிடும் தொகுதிகளின் விபரம் தெரியவரும் என்று - தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்தார்.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், ஜனநாயக முற்போக்கு கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளுடன், தொகுதி பங்கீடு குறித்த பேச்சுவாாத்தைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் இந்தப் பணி முடிந்துவிடும்.

பெப்ரவரி முதலாம் திகதி யார் யார் எத்தனை தொகுதிகளில் போட்டியிடுகிறார்கள், யாருக்கு எந்தத் தொகுதி என்ற விபரம் தெரியவரும். விருது நகரில் நடைபெறவுள்ள மாநாட்டின்போது தி.மு.க. வேட்பாளர்களின் பெயர்களை அறிவிக்கலாம் என்றுள்ளோம். கடந்த சட்டசபைத் தேர்தலின் போது புதிய தமிழகம் மற்றும் விடுதலை சிறுத்தைகள் ஆகியோருக்கு மொத்தமாக 18 தொகுதிகளைக் கொடுத்தோம். ஆனால், ஒரு இடம் தவிர வேறு எந்தத் தொகுதியிலும் அவர்கள் வெல்லவில்லை.

எனவேதான், நாடாளுமன்றத் தேர்தலில் அவர்களுக்கு இடமளிக்க இயலவில்லை இருப்பினும், வரும் சட்டசபைத் தேர்தலின்போது அவர்களையும் சேர்ப்பது குறித்த பரிசீலனை செய்யத் தயாராகவே இருக்கின்றோம் என்றார் கருணாநிதி.

# சோனியா – கருணாநிதி நாளை மறுதினம் சந்திப்பு

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி நாளை மறுதினம் தி.மு.க. தலைவர் கருணாநிதியைச் சந்திக்கவுள்ளார்.

மக்களவைத் தேர்தலில் தி.மு.க. காங்கிரஸ் கட்சிகள் கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன. இதனையொட்டி தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் ஸ்டாலின், முன்னாள் மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு, முன்னாள் மத்திய அமைச்சர் மறைந்த முரசொலி மாறனின் மகன் தயாநிதி மாறன் ஆகியோர் டெல்கி சென்று சோனியா காந்தியைச் சந்தித்துப் பேசினார்.

காங்கிரஸ் மேலிடத் தலைவர்கள் மன்மோகன் சிங், கமல்நாத் ஆகியோர் சென்னை வந்து கருணாநிதியைச் சந்தித்து கூட்டணி தொடர்பாக ஆலோசனை நடத்தினார்.

இந்த நிலையில் சோனியா காந்தி நாளை மறுதினம் சென்னையில் கருணாநிதியைச் சந்தித்து பேசவிருக்கிறார். காங்கிரஸ் கட்சிக்கு எத்தனை இடங்கள் என்பது அப்போது முடிவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# புவியியல்
# விபரணப் புள்ளிவிபரவியல்

I.S.ஜெகன்- B.A(Hons).Geo.Spl

(ii) அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள இரண்டு நிலையங்களுக்கும் உரிய வருடாந்த மழைவீழ்ச்சித் தரவுகளைப் பயன்படுத்தி -

1. AB ஆகிய இரண்டு நிலையங்களுக்குமுரிய பிரிக்கை வரை படங்களை 1 cm இக்கு 500 mm எனும் குத்துயர அளவுத் திட்டத்திற்கமைய வரைக. இரண்டு பிரிக்கை வரைபடங்களையும் ஒரே வரைபடத்தில் காட்டுக.
2. ஒவ்வொரு நிலையத்துக்குமுரிய இடையத்தைக் காண்க.
3. இரண்டு நிலையங்களின் 1966-80 வரை காலத்துக்குரிய வருடாந்த மழைவீழ்ச்சிப் பாங்குகளை ஒப்பிடுக.

அட்டவணை 1 - வருடாந்த மழைவீழ்ச்சி mm இல்.

| வருடம் | A | B | வருடம் | A | B |
|---|---|---|---|---|---|
| 1966 | 2084 | 872 | 1973 | 2311 | 1180 |
| 1967 | 2761 | 1526 | 1974 | 2398 | 512 |
| 1968 | 1975 | 783 | 1975 | 2384 | 883 |
| 1969 | 2544 | 1143 | 1976 | 2667 | 841 |
| 1970 | 2096 | 971 | 1977 | 2346 | 1009 |
| 1971 | 2507 | 1093 | 1978 | 2348 | 982 |
| 1972 | 2240 | 988 | 1979 | 2597 | 1188 |
| | | | 1980 | 2008 | 626 |
| சராசரி மழைவீழ்ச்சி | | | | 2351 | 973 |

(iii) இலங்கையின் மாவட்டங்களின் குடியடர்த்தி (1994) அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ளது.

1. கொடுக்கப்பட்டுள்ள தரவுகளை ஆறு வகுப்புக்களாகப் பிரித்து, அவற்றின் இடரீதியான பரம்பலைக் காட்டுவதற்குத் தரப்பட்டுள்ள இலங்கையின் வெளிப்புறப் படத்தில் மாவட்டங்களை நிழற்றுக.
2. நீர் பெற்ற ஆறு வகுப்புக்கள் சார்ந்த தரவுகளைப் பயன்படுத்தி ஓர் இழைவரையத்தைக் கீறிக்காட்டுக.

### அட்டவணை 1

இலங்கையின் மாவட்டங்களில் குடியடர்த்தி (1994)

| மாவட்டம் | குடியடர்த்தி (ஒரு கி.மீ) | மாவட்டம் | குடியடர்த்தி (ஒரு கி.மீ) |
|---|---|---|---|
| கொழும்பு | 3139 | மட்டக்களப்பு | 105 |
| கம்பஹா | 981 | அம்பாறை | 119 |
| களுத்துறை | 703 | திருகோணமலை | 124 |
| கண்டி | 675 | குருநாகல் | 308 |
| மாத்தளை | 218 | புத்தளம் | 208 |
| நுவரெலியா | 314 | அனுராதபுரம் | 107 |
| காலி | 601 | பொலனறுவை | 104 |
| மாத்தறை | 631 | பதுளை | 262 |
| அம்பாந்தோட்டை | 208 | மொனறாகலை | 66 |
| யாழ்ப்பாணம் | 901 | இரத்தினபுரி | 299 |
| மன்னார் | 71 | கேகாலை | 451 |
| வவுனியா | 60 | கிளிநொச்சி | 39 |
| முல்லைத்தீவு | 39 | | |

(மூலம் :- குடிசன மதிப்பீடு புள்ளிவிபர இலாகா 1995)

அ. மையப் போக்கினை அளவிடுவதற்கான இரண்டு அளவைமுறைகளையும், பிரிகையினை அளவிடுவதற்கான இரண்டு அளவை முறைகளையும் பெயரிடுக.

ஆ. அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி தங்காலையில் 1916 - 1935 இற்கு இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட வருடாந்த மழைவீழ்ச்சியைக் காட்டுவதற்கு ஒரு எளிய விலகல் வரைபடத்தினை வரைக.

### அட்டவணை - 2

தங்காலையில் வருடாந்த மழைவீழ்ச்சி 1961 - 1935 (அங்குலங்களில்)

| ஆண்டு | மழைவீழ்ச்சி | ஆண்டு | மழைவீழ்ச்சி |
|---|---|---|---|
| 1916 | 51.8 | 1926 | 51.9 |
| 1917 | 49.7 | 1927 | 57.3 |
| 1918 | 49.4 | 1928 | 48.1 |
| 1919 | 54.2 | 1929 | 46.9 |
| 1920 | 50.2 | 1930 | 50.9 |
| 1921 | 45.9 | 1931 | 60.5 |
| 1922 | 45.4 | 1932 | 49.6 |
| 1923 | 69.1 | 1933 | 74.7 |
| 1924 | 60.6 | 1934 | 49.2 |
| 1925 | 62.1 | 1935 | 48.4 |
| | | இதன்இடை : | 53.8 |

மூலம் :- The Hydrometeoroelogy of Ceylon (Canada - Ceylon - Colombo Plan Report 1962)

இ. நீர் வரைந்த வரைபடத்தில் இனங்காணக்கூடிய மழை வீழ்ச்சிப் பாங்குகள் பற்றி சுருக்கமாக ஆராய்க.

ஈ. ஒரு பிரதேசத்தின் நீண்டகால மழைவீழ்ச்சிப் பாங்கினைக் காட்டுவதற்கு நீர் பயன்படுத்திய தொழிநுட்பத்தின் பொருத்தத்தன்மை பற்றி ஆராய்க. (முற்றும்)

## 2004 உயிரியல் – பகுதி I

01) உயிர்ப்பீடருடன் சேர்க்கப்படும் பதார்த்தமாவது
1. தயலின் 2. சீதம் 3. பிறபொருள் எதிரி 4. அல்பியூமின் 5. குளோபியூலின்

02) வேரில் கலன் மாறிழையத்தை தோற்றுவிப்பவை
1. ஓட்டருக்கலம் 2. புடைக்கலவிழையம், ஓட்டருக்கலம் 3. பரிவட்டவுறை, புடைக்கலவிழையம் 4. அனுக்காழ், மூலக்காழ் 5. முதல் உரியம், முதற்காழ்.

03) முதலுருமென் சவ்வில் தேர்வு செய்யும் ஆற்றலைக் கொண்டுள்ள மூலக்கூறாவது. -
1. மாப்பொருள் 2. கொழுப்பு 3. புரதம் 4. இலிப்பிட்டு 5. கொழுப்பமிலம்

04) பின்வரும் தொடர்புகளில் சரியானது
1. வுறுகி - Chordata 2. தாய்க்கற்தகடு - Echinodermata 3. முதுகுநாண் - Annelida 4. பலமேலம் - Monera 5. DNA, RNA - வைரசு

05) ஒரு பூக்கும் தாவரத்தில் நுகத்தில் இருந்து விருத்தியடையாதது பின்வருவனவற்றுள் எது?
1. வித்திலை 2. முனைவேர் 3. முளைத்தண்டு 4. வித்தகவிழையம் 5. வித்திலைக் கீழ்த்தண்டு

06) Aabb x aaBB எனப்படும் இனக்கலப்பில் பெறப்படும் எச்சங்கள் ஆட்சியுடைய இயல்புகள் இரண்டையும் வெளிக்காட்டக்கூடிய சாத்தியம் என்ன?
1. 1/4 2. 1/2 3. 1/3 4. 1/6 5. 3/8

07) Somatostatin எனப்படும் ஓமோன் தயாரிப்பதற்குச் செம்மறி ஆடு மூளை பயன்படுத்தப்படுகின்றன. 5 mg Somatostatin தயாரிப்பதற்கு அண்ணளவாகத் தேவையான செம்மறி ஆடுகளின் எண்ணிக்கையாவது
1. 5000 2. 8000 3. 100 4. 500 5. 10000

08) சிறுநீரகத்தியின் இறங்குபும், ஏறுபும் கொண்டுள்ள மேலணிவகையாவது முறையே
1. செவ்வகத்திண்மமேலணி, செதில்மேலணி
2. செதில்மேலணி, செவ்வகத்திண்மமேலணி
3. கம்பமேலணி
4. போலிப்படைகொண்ட மேலணி, செந்தில் மேலணி
5. கம்பமேலணி, செவ்வகத்திண்மமேலணி


09) மனிதனில் காணப்படும் DNA எண்ணிக்கையாவது
1. பல ஆயிரம் 2. 23 3. 23 சோடி 4. 1000 5. 5000

10) நிணநீர் சுற்றோட்டத்தொகுதி பற்றிய கூற்றுக்களில் சரியானது
1. சகல விலங்குகளிலும் காணப்படும்
2. முள்ளந்தண்டு விலங்குகளில் மட்டும் காணப்படும்
3. அனலிட்டுக்களில் மட்டும் காணப்படும்
4. மொலஸ்காவில் மட்டும் காணப்படும் 5. யாவும் சரி

வே.அ.ஞானேந்திரன் BSC.Dip in .eol (தொடரும்...)

இங்கே மடிக்கவும்





# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

▶ பின்வரும் தகவலை வாசித்து இல 01 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

> மரம் தன்னை நாட்டுவீராயின்
> நாடு அழகு பெறும் மண் வளமுறும்.
> மரங்களின் நிழல் குளிர்மை தரும்
> மலர்கள் எம்மை விழிக்கச் செய்யும்
> இனிய பழங்கள் எம்பசி தீர்க்கும்.

▶ மேலே கூறப்பட்டதற்கமைய மரங்களினால் நாம் பெறும் பயன்கள் இரண்டு தருக.

1)........................................................
2)........................................................

▶ பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துள்ள சொல் தருக?

3) அழகு .................... 4) மலர் ......................
5) பழம் .................... 6) மரம் ......................

▶ பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்துள்ள சொற்களை இந்தப் பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக.

7) அவலட்சணம்.................... 8) வெயில்....................
9) வெப்பம்...................... 10) காய்கள்...................

11) பழங்கள் எங்கள் பசி தீர்க்கும் என்ற வாக்கியத்தை ஒருமையில் எழுதுக?

........................................................

12) அழகிற்காக வீட்டினுள் வைக்கப்படும் தாவரங்கள், இரவு வேளைகளில் ஏன் அகற்றப்படுகின்றன?

........................................................

▶ பின்வரும் சொற்களுக்கு இலக்கம் 13 - 16 வரை பொருத்தமான தமிழ்ச் சொற்களை எழுதுக.

13) மரம்...................... 14) நாடு......................
15) மலர் ..................... 16) பழங்கள்...................

▶ இலக்கம் 17 - 22 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களை தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தி எழுதுக.

17) අය්යා ................ 18) විදුහාගාරය ................
19) ලාභය ................ 20) හෝසේ ................
21) හතරයි ................ 22) පිටි ................

▶ பாடசாலை வளவு ஒன்றிலே 15 மாங்கன்றுகள், 10 கொய்யாமரங்கள், 10 வாழைமரங்கள், 05 தென்னைகள் உள்ளன. இந்தத் தாவரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒருமுறை 500 கிராம் பசளையிடப்பட்டால், இல. 23 - 27 வரை விடை தருக.

23) தாவரங்கள் எல்லாவற்றுக்கும் ஒருமுறை பசளை இடுவதற்கு எத்தனை கிலோகிராம் பசளை தேவை?

........................................................

24) ஒரு கிலோகிராம் பசளையின் விலை ரூபா 15 எனின், பசளைக்குச் செலவிடப்பட்ட தொகை யாது?

........................................................

25) சமமான எண்ணிக்கையுடைய மரங்கள் எவை?

........................................................

26) மாங்கன்றுகள், தென்னை மரங்களைப்போல் எத்தனை மடங்கு உள்ளன.

........................................................

27) ஒரு தென்னங்கன்றின் விலை ரூபா 120 எனின், தென்னங்கன்றுகள் வாங்க எவ்வளவு பணம் செலவு செய்திருப்பார்?

........................................................

▶ இல. 28 - 30 வரையுள்ள வினாக்களில் பின்வரும் உணவுகளை அட்டவணைப்படுத்துக.

கரட், வல்லாரை, பொன்னாங்காணி, பருப்பு, உருளைக்கிழங்கு, தக்காளிப்பழம், அவித்த இறைச்சித் துண்டுகள், சோறு.

| (28) உடற்சக்தியைத் தரும் உணவு | (29) உடல் வளர்ச்சியை மேம்படுத்தும் உணவு | (30) உடலைப் பாதுகாக்கும் உணவு |
|---|---|---|
| | | |

31) கீரை வகைகளைச் சமைக்குமுன் அவற்றை ஏன் உப்புநீரில் கழுவுதல் வேண்டும்.

........................................................

▶ நாளாந்தம் எவ்வளவுக்கு எவ்வளவு தேநீர் பருகின்றீர்களோ, அவ வளவுக்கு அவ்வளவு உமது தேகம் ஆரோக்கியம் பெறும் என்பது ஓர் அறிவுறுத்தலாகும்.

இலங்கையில் தேயிலை விளையும் பிரதேசங்கள் இரண்டினை எழுதுக.

32)........................................................
33)........................................................

தேயிலை வளரும் பிரதேசங்களில் தமிழர் தமது வழிபாட்டுக்காகப் பயன்படுத்தும் இசைக்கருவிகள் இரண்டை எழுதுக.

34)........................................................
35)........................................................

36) இலங்கைக்குத் தேயிலையை அறிமுகஞ்செய்த நாட்டவர் யார்?

........................................................

38) இலங்கையின் தேயிலை ஆராய்ச்சி நிலையம் எங்கே அமைந்துள்ளது?

........................................................

39) இலங்கையிலிருந்து தேயிலை வாங்கும் ஒரு நாட்டின் பெயரை எழுதுக?

........................................................

தேயிலையின் சாயத்திற்கு அதிகளவு சீனியைச் சேர்ப்பதால், உங்களது பற்களுக்கு ஏற்படக்கூடிய பற்சேதங்கள் மூன்றினை எழுதுக?

40) ........................................................
41) ........................................................
42) ........................................................

மண்ணரிப்பைத் தடை செய்வதற்கு தேயிலைப் பெருந்தோட்டங்களில் கையாளும் இருமுறைகளை எழுதுக?

43) ........................................................

44) இரு கப் தேநீர் பருகினேன். இவ்வாக்கியத்தின் எழுவாய் எது?

........................................................

45) 5 kg தேயிலையை ஒவ்வொன்றும் 200 g கொண்டதான எத்தனை பைக்கற்றுக்கள் தயாரிக்கலாம்?

........................................................

46) 1 kg தேயிலையின் விலை 140.00 எனின் 200g தேயிலையின் விலை யாது?

.............ரூபா.......................சதம்

▶ இல. 47 முதல் 50 வரை அடைப்புக்குள் தரப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடங்களை நிரப்புக.

(is, Eight, Two, Yes, You, are)

47) Would................ Like cup of tea?
48) .......................... Please.
49) How much....... a cup of tea?
50) ...................rupees.

▶ பின்வரும் தகவலை வாசித்து அதன் கீழுள்ள இல. 51 முதல் 66 வரையுள்ள வினாக்களுக்கு விடைதருக.

ஓரிரு ஆண்டுகள் கழிந்ததன் பின்னர், கிராமம் அதிர்ஷ்டம் குரைந்த காலத்தை எதிர்நோக்க வேண்டியிருந்தது. மழை உரிய காலத்தில் பெய்யவில்லை. வரட்சி மெல்ல மெல்ல மோசமானநினலயை அடைந்தது. கிராமத்தினூடாகப் பாய்ந்து சென்ற ஆறும் வற்றியது. நாட்கள் போக கிராம வாசிகளுக்குக் குடிப்பதற்குத்தானும் ஒரு துழி நீரும் கிடைக்கவில்லை. காட்டு மரம், செடி, கொடிகள் யாவும் கருகிப்போயின. மிருகங்கள் தமக்குச் சௌகரியமான இடங்களை நோக்கிச்சென்றன. இதனால், மனிதர் தமது உணவையும் பெற்றுக்கொள்ளமுடியாது தவித்தனர். மூத்த கிராம வாசிகள் தமது சொந்த இடங்கலை விட்டுவிட்டு தாமும் போக நேரிடுமோ என்று அஞ்சி அஞ்சிக் காலம் கழித்தனர்.

▶ பந்தியில் பிழையாக எழுதப்பட்ட நான்கு சொற்களையும் இனங்கண்டு எழுதுக.

51) ..........................................
52) ..........................................
53) ..........................................
54) ..........................................

▶ பநதயில் அடுக்குமொழிகள் இரண்டு உள்ளன. அவற்றை இனங்கண்டு எழுதுக.

55) ..........................................
56) ..........................................

▶ பந்தியிலுள்ள பெயர் அடைமொழிகள் இரண்டினை எழுதுக.

57) ..........................................
58) ..........................................

▶ பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துச் சொல் தருக.

59) ஆண்டு ..............................
60) நாள் ..............................

▶ பின்வரும் கருத்தைத் தரும் தனிச்சொல்லை எழுதுக.

61) மழை பெய்யாத காலம் ..........................
62) உணவு கிடைத்தல் மிக அரிதாயுள்ள காலம் ..........................................

▶ பின்வரும் சொற்களை ஒருமையில் எழுதுக.

63) ஆண்டுகள் ..............................
64) நாட்கள் ..............................
65) இடங்கள் ..............................
66) கிராமவாசிகள் ..............................

▶ பின்வரும் வாக்கியங்களைத் தொடர்வாக்கியமாக மாற்றி எழுதுக.


உரிய காலத்தில் மழை பெய்யவில்லை.
நாளுக்கு நாள் வரட்சி மிகுந்து வந்தது.
கிராமத்தினூடாகப் பாய்ந்த ஆறு வற்றியது.


..........................................
..........................................
..........................................


▶ இல. 67 முதல் 72 வரை 'காட்டில் வளரும் தாவரங்கள் நாம்' எனனும் தலைப்பில் ஏழு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது பொருத்தமான எழுவாய் பயனிலையுடன் இருத்தல் வேண்டும்.

67)..........................................
68)..........................................
69)..........................................
70)..........................................
71)..........................................
72)..........................................

▶ முதலாவது படத்துக்கு மிகவும் பொருத்தமான படத்தைத் தெரிந்து அதன்கீழ் கோடிடுக.


73) 
(1) (2) (3) (4)

74) 
(1) (2) (3) (4)

75) 
(1) (2) (3) (4)


76) 
(1) (2) (3) (4)


77) 
(1) (2) (3) (4)


78) 
(1) (2) (3) (4)

▶ இல. 79 - 83 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு படம் ஏதோ வகையில் வித்தியாசமானது. வித்தியாசமான படத்தைத் தெரிந்து அதன்கீழ் கோடிடுக.

79) 
(1) (2) (3) (4) (5)

80) 
(1) (2) (3) (4) (5)

81) 
(1) (2) (3) (4) (5)


82) 
(1) (2) (3) (4) (5)


இங்கே மடிக்கவும்



▶ இல. 83 - 86 வரையான பொருத்தமற்றதைக் குறிக்குக.


83) 
(1) (2) (3) (4) (5)

84) 
(1) (2) (3) (4) (5)

85) 

(1) (2) (3) (4) (5)

86) 
(1) (2) (3) (4) (5)




87) இலக்கம் 1 இன் தொழிற்பாடு யாது?..............................
88) இலக்கம் 2 இன் தொழிற்பாடு யாது?..............................
89) இலக்கம் 3 இன் தொழிற்பாடு யாது?..............................
90) இலக்கம் 4 இன் தொழிற்பாடு யாது?..............................
91) இலக்கம் 5 இன் தொழிற்பாடு யாது?..............................

T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2004 - ஏப்ரல்

## தமிழ்

02) கையில் இருக்கும் கோரைப்பாயை விரிப்பதே ஓர் ஜாலவித்தை நெடுநாள் உண்மையாக உழைத்து பென்சன் கொடுக்கப் படாததால் அது நடுமத்தியில் இரண்டாகக் கிழிந்து, ஒரு கோடியில் மட்டும் ஒட்டிக் கொண்டிருந்தது. அதை விரிப்பது என்றால் முதலில் உதறித் தரையில் போட்டுவிட்டுக் கிழிந்து கிடக்கும் இரண்டு துண்டுகளையும் சேர்த்துப் பொருந்த வைக்கவேண்டும். அதுதான் பூர்வாங்க வேலை. பின்பு விடுதலைபெற முயற்சிக்கும் அதன் கோரைக் கீற்றுக்கள் முதுகில் குத்தாமல் இருக்க ஒரு துண்டையோ அல்லது மனைவியின் புடவையையோ அல்லது குழந்தையின் பாவாடையையோ எதையாவது எடுத்து மேலே விரிக்கவேண்டும். வீட்டின் பாக வசதியும் விசித்திரமாக இருந்தது. முன்பக்கம் ஒற்றை சன்னல் வேண்டும். படைத்த ஓர் சிற்றறை அதற்கப்புறம் எஸ்கோ பல கட்டுக்கள் தாண்டி மற்றொரு அறை அது தான் சமையல் அறை. முதல் அறை படிக்க, படுக்கநாலுபேர் வந்தாலும் பேச இவை எல்லாவற்றுக்கும் பொது இடம் முதலில் முருகதாசர் பொருளாதார நிலையை உத்தேசித்து அதில் குடியிருக்கலாம் என்று துணிந்தார். அதனால் தனக்கும் சகதர்மினிக்கும் இப்படி நிரந்தமான பிளவு இருக்கும் என்று சிறிதும் எட்டி யோசிக்கவில்லை மேலும் அவர் யோசிக்கக் கூடியவரும் அல்லர்.

அ) இப்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள முருகதாசரின் வாழ்க்கை நிலை யாது?

ஆ) சகதர்மினிக்கும் தமக்குமிடையில் இப்படி நிரந்தர பிளவு இருக்கும் என்று யோசிக்கவில்லை என்பதிலிருந்து முருகதாசரின் நிமையையும் கதை நிகழ்களத்தையும் ஆசிரியர் எவ்வாறு தொடர்புபடுத்துகின்றார்.

இ) இவரது நிலையை ஆசிரியர் எவ்வாறு சித்திரிக்கின்றார் என்பதைச் சுருக்கமாகக் கூறுக.

### பகுதி 2

03) சான்றாமை என்னும் அதிகாரத்திலே வள்ளுவன் கூறுவனவற்றை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளககுக.

அ) சால்பின் நலன்கள் எவை எனவும், சால்பின் நிறைவுக்குரிய வழிகள் எவை என்பதையும் இச் சால்பின் சிறப்பின் மூலம் தெள்வு படுத்துக.

ஆ) பகைமையை மறக்கச் செய்யும் பண்பு சான்றாண்மைக்கு உண்டு எனும் சால்பின் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இ) சான்றோனின் சிறப்பு எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

04) பரதன் இராமனை அரசேற்க வேண்டுவதையும், அந்த வேண்டுகோளை இராமன் மறுத்துரைப்பதையும் தொகுத்துக் கூறி அவ்வுரையினூடாக வெளிப்படும் பரதனின் குண இயல்புகளை ஆராய்க?

05) கல்வாரி நோக்கிச் செல்லும் இயேசு பிரானைக் கண்ட எருசலேம் நகர மக்கள அடைந்த துயரத்தினை இரட்சணிய யாத திரிக ஆசிரியர் சித்தரிக்குமாற்றைத் தெளிவுபடுத்துக.

06) நாகம்மாள் நாவலின் அமைப்பினையும் சிற்பினையும் பின்வரும் அம்சங்களின் கீழ் தெளிவுபடுத்துக.

அ) முதல் பிரதேச நாவல்.
ஆ) கிராமிய வாழ்க்கையின் யதார்த்த பண்பு.
இ) சொத்துடமை, பாகப் பிரிவினை பற்றிய கருத்து நிலை.
ஈ) நாகம்மாள், கெட்டியப்பன், சின்னப்பன் ராமாயி என்னும் பாத்திரப் படைப்பு.
உ) கொங்கு நாட்டு பிரதேச மண்வாசனை.

07) பாரதியினுடைய தேசப்பற்றுக்கு எந்தையும் தாயும் என்னும் கவிதையும் சமூகப்பற்றுக்கு புதுமைப்பெண் விடுதலைக் கும்மி என்னும் கவிதையையும் எடுத்துக் காட்டுகளாக கூறலாம். இந்தக் கூற்றினை ஆராய்க.

08) அ) பாற்கஞ்சி என்னும் சிறுகதையில் வைத்தியலிங்கம் யாழ்ப்பாண விவசாயிகளினதும் வாழ்க்கை அவலங்களை எவ்வாறு படம் பிடித்துக் காட்டுகின்றார்.

ஆ) இந்தக் கதையினூடாக முருகேசரதும் காமாட்சியினதும் எதிர்பார்ப்புக்களும் எமாற்றங்களும் சித்தரிக்கப்படுமாற்றை விளக்குக.

09) பின்வருவனவற்றுக்குச் சுருக்கமான விளக்கம் தருக.

அ) நாச்சியார் திருமொழிப் பாடல்கள் விளக்கும் வைணவ திருமண நடைமுறைகள்.

ஆ) வசந்தவல்லி பந்தாடும் திறனும் அவளது அழகுத் தோற்றமும்.

இ) பெரிய புராண வசன முன்னுரை என்னும் கட்டுரையில் ஆறுமுகநாவலர் கையாளும் தமிழ் நடை.

ஈ) பாண்டிமாதேவி கண்ட கனாநிகழ்வு.

உ) மாமலர் முண்டகம்... எனத் தொடங்கும் கலித்தொகைப் பாடல் தரும் செய்திகள்.

ஆசிரியர் என்.பாலா ~
மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

### காரைநகர் கற்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் - வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் - எதிர்வரும் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

சகலபகுதிகளில் இருந்தும் பக்தர்கள் மகா கும்பாபிஷேக வைபவத்தில் கலந்துகொள்ளும் விதமாக, அன்றைய தினம் வடபிராந்திய போக்குவரத்து சபை மற்றும் தனியார் வாகன சங்க ஊர்திகள் மேலதிக சேவைகளை நடத்தும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (206)

### அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த யாழ்.ஊரி - அ.மி.த.க. பாடசாலைக்குப் புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்படவேண்டியுள்ளதால், இந்தப் பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருப்பதாகத் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இலங்கை அதிபர் சேவைத் தரத்தில் உள்ளவர்களும், ஆசிரியர் தரம் 2-1, 1 ஐ சேர்ந்தவர்களும் இதற்கு விண்ணப்பிக்கமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# எந்தச் சூழ்நிலையிலும் எமது அமைப்பு விடுதலைக்கான பயணத்தைத் தொடரும்

## நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர்

எதிர்காலத்தில் யுத்தம் வெடித்தாலும் ஆச்சரியப்படத்தக்கதல்ல. சந்திரிகா - சோமவன்ச கூட்டு - யுத்தமா? சமாதானமா? என்ற கேள்வியைத்தக்கவைத்துள்ளது. அரசு மீண்டும் எம்மீது யுத்தத்தைத் திணித்தால், அதனால் யுத்தத்திற்கு முகம் கொடுத்து, தமிழீழத் தனித் தாயகத்தை அடைந்தே தீருவோம்.

இவ்வாறு கூறினார் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.நல்லூர் கோட்ட அரசியற்துறை பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி 776 ஆம் இலக்கக் கட்டடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட யாழ்.மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கப் பணிமனையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தவைபவம் - சங்கத் தலைவர் க.ஸ்ரீராஜன் தலைமையில் இடம்பெற்றது. இதற்கு முன்பாகச் சங்கப் பெயர் பலகையைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.நல்லூர் கோட்ட மகளிர் அரசியற்துறை பொறுப்பாளர் பூமகள் திரைநீக்கம் செய்தார்.

பொ.ஈஸ்வரன் தொடர்ந்து பேசுகையில்-

இதுவரை ஒன்பது தடவைகள் நாட்டுள்ளும், வெளியேயுமாக ஒப்பந்தங்கள் செய்யப்பட்டதும், கிழித்து வீசப்பட்டதும், செயலிழந்து போனதுமான வரலாற்றைக் கண்டவர்கள் நாம். இந்த சமாதான சூழ்நிலையிலும் 26 போராளிகளை நாம் இழந்துள்ளோம்.

எனினும், எமது சமாதான நோக்கை இரண்டு வருடங்களாக தேசியத் தலைவர் பிரபாகரனின் வழி நடத்தலில் நிரூபித்து வந்துள்ளோம். சந்திரிகாவும் - ஜே.வி.பியும் எம்மை ஓரங்கட்டிவிடமுடியாது.

தாயகப் பூமியை அடைவதற்கான உறுதிப்பாடு எம்மத்தியில் ஒரு துளியேனும் இழக்கப்படவில்லை. சிங்கள மக்கள் அனுபவிக்கும் அதேநிலைமை, எமது மக்கள் மத்தியிலும் தோன்றவேண்டும். அதற்கு அரசு விட்டுத்தந்தால், அதற்கு அமைவாக நாம் செயற்பட ஆயத்தமாக இருக்கிறோம்.

எந்தச் சூழ்நிலையிலும் எமது அமைப்பு விடுதலைக்கு நேர்செல்லத் தயாராக இருப்பதோடு, எம் மகளும் தயாராக இருக்கிறார்கள். விடுதலையை தோற்றுவிப்பதற்காக எமது அமைப்பின் செயற்பாடு ஒரேமாதிரியாகவே இருக்கும். அதற்கு சிகை ஒப்பனையாளர் போன்ற நிர்வாகக் கட்டமைப்புக்கள் சிறப்பாகச் செயற்பட வேண்டும் என்றார்.

அ.சிவலிங்கம், ச.ஆனந்தபாலன், சி.நாகேஸ்வரன், சி.ரத்தினகுமார், சி.செல்லத்துரை ஆகியோரும் இந்த நிகழ்வில் உரையாற்றினர். (206)

### மாகாணக் கல்வி அமைச்சிற்கு 4 வாகனங்கள்

வடக்கு - கிழக்கு மகாணக் கல்வி அமைச்சிற்கு யுனிசெப் நிறுவனத்தினால் நான்கு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யூனிசெப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரெட்சைபான்- மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளரிடம் இவற்றைக் கையளித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்தவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(122)

### மருதங்கேணியில் இறால் சீசன்

மருதங்கேணிப் பிரதேசத்தில் இறால் சீசன் களைகட்டியுள்ளது. நாளாந்தம் பெருமளவு இறால்கள் பிடிக்கப்பட்டு வருகின்றன.

வியாபாரிகளினால் கடற்கரையில்வைத்து ஒரு கிலோ இறால் இருநூற்றி ஐம்பது ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டு, கொழும்பிற்கு உடனடியாகக் கொண்டுசெல்லப்படுகின்றது.

இதேவேளை, கொழும்பில் ஒரு கிலோ இறால் 700 ரூபா முதல் 1000 ரூபாவரை விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (122)

# நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகு சேவை நேரங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையிலான படகுசேவை நேரங்கள் மீண்டும் 01.02.2004 தொடக்கம் மாற்றம்செய்யவேண்டும் என்ற தீர்மானம் - இந்த மாதம் இடம்பெற்ற நெடுந்தீவு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுகூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

காலைநேர சேவை தற்போது உள்ள நேர நடைமுறைக்கேற்பவும், மாலைநேர சேவைமட்டும் நெடுந்தீவிலிருந்து மாலை 2 மணிக்கும், குறிகாட்டுவானிலிருந்து மாலை 4 மணிக்கும் இடம்பெறவுள்ளது. இதேவேளை, இந்த நேரமாற்றத்திற்கு ஏற்ப வடபிராந்தியப் போக்குவரத்து சபை - பேருந்து சேவை நேரமும் மாற்றம் செய்யப்படும் எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், தரைப்போக்குவரத்து சேவை தொடர்பாக உடனடியாக நேரமாற்றம் செய்யக்கூடிய நிறைவேற்று அதிகாரமுள்ள அலுவலர்கள் எவரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளாமையினால், அந்தத் தீர்மானம் உடன் நிறைவேற்றப்படவில்லை.

தற்போதுள்ள நேரமாற்றப் படகு சேவைக்கேற்ப, பேருந்து சேவை இடம்பெறாமையினால், பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இது எதிர்வரும் 01 ஆம் திகதி முதல் மேற்கொள்ளும் நேரமாற்றத்தின்போதும் இடம் பெறாதிருக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுமா எனப் பயணிகள் கேள்வி எழுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# அரியாலை பகுதியில் கோஷ்டி மோதல்

(யாழ்ப்பாணம்)

அரியாலைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் இரு இளைஞர் குழுக்களுக்கிடையே மோதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகிறது. கத்தி, வாள், சைக்கிள் செயின் சகிதம் அரியாலை கனகரட்ணம் வீதி, தபாற்கட்டைச் சந்தி மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களில், பெண்கள் உட்படப் பலர் தாக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

நாயன்மார்கட்டில் குறிப்பிட்ட பகுதியிலுள்ள சில இளைஞர்களும், அரியாலையின் ஒரு பகுதியிலுள்ள இளைஞர்களுக்கும் இடையே ஆரம்பத்தில் ஏற்பட்ட பகைமையே இந்த மோதல்களுக்குக் காரணம் என்று அறியவருகிறது.

தாக்குதலில் ஈடுபட்ட ஒரு பகுதி இளைஞர்களினால் - தபாற்கட்டைச் சந்திக்கு அருகிலுள்ள சலூன் ஒன்றும், அரியாலை கனகரட்ணம் வீதியிலுள்ள வீடு ஒன்றும் சேதத்திற்குள்ளாக்கப்பட்டதாக அறியவருகிறது. இந்த மோதல் சம்பவங்கள் அவ்வப்போது தொடர்வதால், அந்தப் பகுதி மக்கள் மத்தியில் பதற்றம் நிழவுகின்றது. (55)

# மின்சாரம் தாக்கியதில் மாணவன் காயம்

(யாழ்ப்பாணம்)

மின்சாரசபையினரின் அசமந்தப் போக்கினால் - சிறுவனொருவன் மின் தாக்குதலுக்குள்ளான சம்பவம் நாயனமார்க்கட்டுப் பகுதியிலே இடம பெற்றுள்ளது. இது தொடர்பாகத் தெரியவருவதாவது - நாயன்மார்க்கட்டுப் பகுதியிலுள்ள குறுக்கு வீதியொன்றில் மரம் முறிந்து வீழ்ந்ததால், மின்சார கம்பிகள் அறுந்துள்ளன.

இந்தச் சம்பவம் நடைபெற்றவுடனேயே மின்சாரசபைக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் வர காலதாமதமானதால், காலை பாடசாலைக்குச் சென்றுவிட்டு மதியம் வீடு திரும்பிய ஒன்பது வயதுச் சிறுவன் மின்தாக்குதலுக்குள்ளானார்.

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் ஆண்டு 4 இல் கல்வி கற்கும் நியூட்டன் நிலோஜன் என்ற மாணவனே மின்தாக்குதலுக்கு இலக்கானவராவார். இவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் மின்தாக்குதலுக்குள்ளானதை அறிந்து, இவரைக் காப்பாற்றப்போன இவரது தாயாரும் மின்தாக்குதலுக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. (121)

## சின்னஞ்சிறு செய்திகள்

### அல்லப்பிட்டி விபத்தில் இளைஞன் படுகாயம்

அல்லைப்பிட்டி சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தொன்றில், இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஹயஸ் வானும் - மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்களில் பயணம் செய்த காரைநகரைச் சேர்ந்த நடராஜமணியம் சிவகுமார் (வயது - 23) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் தற்சமயம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (121)

### காற்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

வேலணை செயலக விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு, இடம்பெறவுள்ள காற்பந்தாட்டச் சுற்றுப்போட்டி - பெப்ரவரி மாதம் 4, 5 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. புங்குடுதீவு மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில், பங்குபற்ற விண்ணப்பித்த பதிவு செய்யப்பட்ட கழகங்களைப் பங்குபற்றுமாறு யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ச)

### ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் - நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில், பிரதேச செயலர் எஸ்.புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்குக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சமுகமளிக்கவுள்ளதால், சம்பந்தப்பட்ட திணைக்கங்களின் பிரதிநிதிகளையும், அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் தவறாது சமுகமளக்குமாறு பிரதேச செயலர் ,தெரிவித்துள்ளார்.

### சதுரங்கப் போட்டி

(வடமராட்சி)

வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான சதுரங்கப்போட்டிகள் - எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர்கள் இந்தப் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு - உதவி கல்விப்பணிப்பாளர் வே.வல்லிபுரம் அறிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகள் ஆண்,பெண் இரு பாலருக்கும் - தனிநபர், குழு என்றமுறையில் நடைபெறவுள்ளது. (122)

# சட்டவிரோதமாக எடுத்துவரப்பட்ட மதுபானம் பொலிஸாரால் பறிமுதல்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பகுதிக்குச் சட்டவிரோதமாக எடுத்துவரப்பட்ட மதுபானங்கள் - கடந்த திங்கட்கிழமை நெடுந்தீவு துறைமுகப் பகுதியில் வைத்துப் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்குச் சென்ற, கடந்த 26 ஆம் திகதி, மாலை நேரப்படகு சேவையில் பயணித்த பயணிகள் ஆறுபேர் - சட்டவிரோதமாக ஒரு தொகை மதுபானங்களைக் கொண்டுசெல்ல முற்பட்டபோது - பொலிஸாரால் துறைமுகப்பகுதியில் வைத்து பறிமுதல் செய்யப்பட்டதுடன், அவர்கள் பெயரில் வழங்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே வீடுகளில் வைத்து மதுபானம் விற்பனை செய்த பலர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, நீதி மன்றில் தண்டப்பணம் கட்டியுள்ளமை இங்கு குறிபபிடத்தக்கது.(113)

# நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் பங்குபற்றவில்லை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேசசெயலகப் பிரிவின் முதலாவது ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின்போது, வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள் எவரும் கலந்துகொள்ளாமையினையிட்டு, கூட்டத்தில் கலந்துகொண்ட பலராலும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

கடந்தநான்கு மாதங்களுக்கும் மேலாகக் குமுதினிப் படகுசேவை இடம்பெறாமல்விட்டதும், அதனால் நெடுந்தீவு மக்கள் கடற்போக்குவரத்தின் போது அனுபவிக்கும் துயரங்களும், எப்போது படகுசேவை முற்றாக ஸ்தம்பிதமடையுமோ என்ற ஏக்கங்களும் நிறைந்துள்ளவேளையில், இடம் பெறும் கூட்டத்தில் எந்தவித முன்னறிவிப்புமின்றி சமுகமளிக்காமை - திட்டமிட்ட ஒரு நடவடிக்கையே எனவும் பலராலும் பிரஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (113)

# திருட்டுச் சந்தேக நபர்கள் பிணையில்செல்ல அனுமதி

மோட்டார் சைக்கிளில் வந்து தங்கநகைகளை அறுத்துக் கொண்டு ஓடியதாகச் சந்தேகிக்கப்பட்டு கைதான மூன்று சந்தேகநபர்களை - யாழ். நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் பிணையில் செல்ல அனுமதித்தது.

இந்த மாதம் 8 ஆம் திகதி கொக்குவில் கேணியடிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று இளைஞர்கள், வீதியால் சென்றுகொண்டிருந்த பெண்ணொருவரின் தங்கநகைகளை அபகரித்துக் கொண்டு தப்பியோடினர்.

இத்திருட்டில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் ஒருவர் இளைஞர்கள் சிலரால் பிடிக்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். பின்னர், பிடிபட்ட இளைஞர் கொடுத்த தகவலின் பேரில் ஏனைய இரண்டு பேரும் இந்த மாதம் 20 ஆம் திகதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்கள் மூவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசாரணைகளின்போதே, பிணை அனுமதியை வழங்கினார்.

இளைஞர்களால் துரத்திப்பிடிக்கப்பட்ட திருடனின் தாயார் நாலரைப் பவுண் நகைகளை - முறைப்பாட்டுக்காரரான, நகைகளைப் பறிகொடுத்த இராமு குணரட்ணம் என்பவருக்கு வழங்கியதை அடுத்தே, பிணை அனுமதியை நீதிவான் வழங்கினார்.

ஆனால், முறைப்பாட்டுக்காரரும், நகைகளை ஒப்படைத்தவரும் நகைக்கடை ஒன்றிற்குச் சென்று, நகைகளின் நிறை, தரம் என்பவற்றைப் பரிசோதித்து, நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தியதையடுத்தே, இவர்கள் பிணையில்செல்ல அனுமதிக்கப்படுவார்கள் எனவும் நீதிவான் தனது உத்தரவில் தெரிவித்தார்.

இந்த் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்களாகச் சந்தேகிக்கப்படும் மூவரையுமே தலா மூவாயிரம் ரூபா காசுப் பிணையிலும், பதினையாயிரம் ரூபா ஆடபிணையிலும் செல்ல நீதிவான் அனுமதித்தார். (ச)

### மெய்வல்லுநர் போட்டி

(யர்ழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் கனிஷ்ட பிரிவினருக்கான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி - எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (72)

செய்திக் கட்டுரை - 1

— ஆதி —

# கல்வித்தரம் வீழ்கிறது என சும்மா இருப்பது தகுமா?

தமிழர்களின் தளர்வுநிலைக்குக் காரணம் - தேசிய சிந்தனையுடன் செயற்படும் அதிகாரிகளோ, தலைவர்களோ, தமிழர்களைப் பொறுத்தமட்டில் அரிதாகவே உள்ளமை ஆகும். ஏழைகள் பக்கம் தூரநோக்கில் பார்க்கக்கூடிய நல்ல மனிதர்களையும் எமது தேசத்தில் காணமுடியவில்லை.

தனிநபர் பிரசித்தியும், பணம் சம்பாதித்தலையும் நோக்கமாகக்கொண்டு செயற்படும் அதிகாரிகளும், அரசியல் வாதிகளுமே, எமது தேசத்தின் இழிவுநிலைக்குக் காரணம். அத்தகையவர்களை இனம்காண்பதும், அவர்களின் திருவிளையாடல்களை அம்பலப்படுத்துவ தும் ஊடகங்களின் முக்கிய பணியாகும்.

யாழ்.குடாநாட்டின் கல்விநிலை வீழ்ச்சி பற்றி பேசப்படுகின்றதே தவிர, அதற்காகக் கவலைப்பட்டு யாழ்.குடாநாட்டு கல்வியினை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்துவரும் அதிகாரிகளையும், நல்ல மனிதர்களையும் கைவிரல்விட்டு எண்ணலாம். கட்டாயக் கல்விச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளபோதுமகூட, யாழ்.குடாநாட்டில் 20,000 சிறுவர்கள் (14 வயதுக்குட்பட்டோர்) பாடசாலைக்குச் செல்வதில்லை. இவற்றிற்கான முக்கிய காரணிகள் பற்றி ஆராய்கின்றபோது, பல உண்மைகள் வெளிவருகின்றன. ஆனால், சம்பந்தப்பட்டவர்கள் அதுபற்றி ஆக்கபூர்வமாகச் சிந்திப்பதில்லை.

நகர்ப்புறப் பாடசாலைகளில் ரூபா 20,000 வரை நன்கொடை என்ற பெயரில் புதிதாக அனுமதி பெறும் மாணவர்களிடம் வசூலிக்கப்படுகின்றது. இதைவிட, மாணவர்களைப் பாடசாலையில் இணைத்துக்கொள்வதில் பல பாரபட்சங்கள் காட்டப்படுகின்றன. இவை பற்றி கல்விப் பணிப்பாளர்களுக்கு எத்த னையோ முறைப்பாடுகள் செய்யப்படுகின் றன. கல்விப் பணிப்பாளர்கள் - அதிபர்களுக்குச் சுற்றுநிருபங்களை மட்டும் அனுப்பிவருகின்றனர். மாணவர்களின் அனுமதிக்கு நன்கொடை வாங்கக் கூடாது என்று. ஆனால், கல்லூரியும் அதற்குச் செவிசாய்ப்பதாக இல்லை.

நகர்ப்புறப் பாடசாலைகளிலும், பிரபல பாடசாலைகளிலும் ஆரம்பிக்கப்பட்ட நன்கொடை வசூல், தற்போது கிராமப்புறப் பாடசாலைகளிலும் பரவிவருகிறது. இத்தகைய வசூல் ஏழை மாணவர்களின் கல்வியையும், வாழ்வையும் வெகுவாகப் பாதித்துள்ளது. இது யாழ்.குடாநாட்டுக் கல்விநிலை வீழ்ச்சிக்கு முக்கியமான காரணியாகும்.

தனியார் கல்வி நிலையங்களின் செயற்பாடு யாழ்ப்பாணக் கல்வியில் முக்கிய பங்கு வகிப்பதை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பாகவும், அரச பாடசாலை ஆசிரியர்கள் அதில் கற்பித்தல் தொடர்பாகவும் கல்வியமைச்சு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அது ஒரு புறமிருக்க, எமது பிரதேசத்தில் விதிவிலக்கான நடைமுறைகள் இருந்து வந்தன. அதுவே இன்று ஏழை மாணவர்களின் கல்வியில் பல்வேறு வழிகளில் பாதிப்பை ஏற்படுத்தும் முக்கிய காரணியாக மாற்றம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தனியார் கல்வி நிறுவனங்கள், பாலர் கல்வி முதல் பட்டப்படிப்பு வரை கல்வியூட்டலில் ஈடுபட்டுவருகின்றன. இத்தகைய போதனையில் ஈடுபடுவோர் பாடசாலை ஆசிரியர்களாகவும், அதிபர்களாகவும், கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகளாகவும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களாவும், ஏனைய உயர் கல்வி அமைப்புக்களின் அதிகாரத்தில் உள்ளவர்களாகவும் உள்ளனர்.

தனது கடமையினைச் சரிவரச் செய்கின்ற நபர்கள் - தனது ஓய்வு நேரத்தையோ, மேலதிக நேரத்தையோ தனக்கும், சமூகத்திற்கும் பயனுள்ள வழியில் செலவிட முற்படுவது ஒன்றும் தவறல்ல. ஆனால், அவ்வாறு நடக்கத் தவறுகின்றவர்களால் எமது சமூகம் எத்தகைய பாதிப்புக்குள்ளாகிறது என்பதுதான் இங்கு விமர்சனத்துக்குள்ளாகின்றது. பாடசாலைகள் தமது கடமைகளைச் சரிவரச் செய்யுமானால், தனியார் கல்வி நிறுவனத்துக்கு மாணவர்கள் செல்லவேண்டியதில்லை. தனியார் கல்வி நிறுவனங்களின் கற்றல், கற்பித்தல் செயன்முறைகள் முற்றிலும் பரீட்சையினை மையமாகக்கொண்டு மாணவர் ஒழுக்கம், கட்டுப்பாடுகள் தவிர்ந்த, அதிகளவில் கவர்ச்சியை நோக்கமாகக் கொண்டவை என்பது வெளிப்படை உண்மை. இத்தகைய ஆசிரியர்கள் - மாணவர்களுடன் வெளிப்படையாகவே நகைச்சுவை என்ற வடிவில் தகாத உரையாடல்கள் கொள்வதும், யாவரும் அறிந்த விடயமே.

தனியார் கல்வி நிறுவனங்களில் கற்றுவிட்டுப் பாடசாலைக்குச் செல்கின்ற மாணவர்கள் - ஏனைய மாணவர்களின் கற்றலுக்கு இடையூறாக இருப்பர் என்பது கல்வி உளவியல். அத்துடன் - எல்லா மாணவர்களுக்கும் தனியார் கல்வி நிறுவனம் செல்வதற்கான வாய்ப்பு, பொருளாதார வசதிகள் என்பன கிடைப்பதில்லை. ஆகவே, அங்கும் ஏழை மாணவர்களும் பின்தங்கிய பிரதேச மாணவர்களுமே பாதிக்கப்படுகின்றனர்.

அண்மையில் வலிகாமம் பகுதியில் ஒரு தனியார் கல்வி நிறுவனம் - விழா ஒன்றினைக் கொண்டாடியது. அங்கு பிரதம விருந்தினராகப பல்கலைக்கழகப் பீடாதிபதியும், சிறப்பு விருநதினர்களாக மூன்று பெரிய பாடசாலைகளின் அதிபர்களும் கலந்துகொண்டு, அந்தக் கல்வி நிறுவனம் ஆற்றும் சேவை பற்றி உரையாற்றினார்கள். ஆகவே, தம்மால் தவறவிடப்பட்டவற்றை அந்தக் கல்வி நிறுவனம் ஆற்றியுள்ளது என்பதனை இவர்கள் ஒப்புக்கொண்டுள்ளார்கள். இத்தகைய அதிகாரிகளும் எமது இனத்திற்குக் கிடைத்த சாபக்கேடு என்பதுதான் இங்கு உண்மை. பாடசாலைகள் தமது கடமைகளைச் சரிவரச் செய்தால், தனியார் கல்வி நிறுவனத்திற்கு இடமே இருந்திருக்காது என்பதை இத்தகையவர்கள் அறியவேண்டும்.

இதனைவிடவும், கவலைப்படவேண்டிய விடயம் - அதே இடத்தில் அரசியல் பிரமுகர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் அங்கு காசு வாங்கிக் கல்வியை விற்கும் செயற்பாட்டுக்குப் பாராட்டுக் கூறினார். இங்கு சென்றவர்கள் யாரும், சமூகத்தில் ஒரு சாரார் இந்த நடவடிக்கையால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதனைக் கண்டுகொள்ளவில்லை. ஏழைகள் ஏழைகளாகவே இருக்கட்டும். வசதியுள்ளவர்களும், செல்வாக்குள்ளவர்களும் வாழட்டும் என்ற மனப்பான்மையுடன் நடந்துகொள்வதுதான் வேதனைதரும் விடயமாகும்.

அதிகாரத்தில் உள்ளவர்களுக்குச் சட்டைப்பை நிறையவேண்டும், அரசியல்வாதிகளுக்கு வாக்குப்பெட்டி நிறையவேண்டும். தேசம் பற்றியோ, இனம் பற்றியோ, தேசியம் பற்றியோ அவர்களுக்குக் கவலை இல்லை, சமூக சிந்தனையும், தூரநோக்கும் கொண்ட நல்ல உள்ளங்கள் இதனைத் தட்டிக்கேட்க முன்வரவேண்டும்.

தமிழர்களைக் கல்விரீதியாகத் திட்டமிட்டமுறையில் இலங்கை அரசு புறக்கணித்து வருகிறது. வட-கிழக்கில் கல்வி அபிவிருத்திக்கான செயற்திட்டங்கள் மந்தகதியில் நடைபெறுகிறது. பாடசாலைகளுக்கான வள ஒதுக்கீட்டிலும் புறக்கணிப்புக்களும், பாரபட்சங்களும் நடைபெறுகின்றன. ஆனாலும், அத்தகைய பௌதீக, மனித வளத் தட்டுப்பாடுகளுக்குள்ளும் எமது மாணவர்கள் பல சாதனைகளைப் படைத்துள்ளார்கள். பொருளாதாரத்தடைகளுக்குள்ளும் நாம் எமது கல்வியைத் தொடர்ந்துள்ளோம்.

எனவே, வளப்பற்றாக்குறையைக் கொண்ட வடக்கு - கிழக்கில் அத்தகைய, கிடைக்கக்கூடிய வளங்களைப் பகிர்வதில் காணப்படும் புறக்கணிப்புக்கள் வேதனை தருவதாக உள்ளது.

தனியார் கல்வி நிறுவனங்கள் தமது வருவாயை ஈட்டும் நோக்கத்தை மட் டும் கொண்டிராமல், ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பணியாற்ற செயற்திட்டங்களை முன்னெடுக்க முன்வரவேண்டும். அரசியல் வாதிகளும், பிரபலங்களும் ஆக்கபூர்வமாகச் சிந்தித்து தமிழ் மக்களின் சமூக, பொருளாதார விடுதலைக்கு வழி அமைக்க வேண்டும்.

செய்திக் கட்டுரை - 2

எஸ்.ஜெயாநந்தன்

# யாழ்ப்பாணத்திலும் ஒரு பாதாள உலகம் உருவாகிறதா?

இன்றைய சூழ்நிலைப் போக்கும், அதன் தொழிற்பாட்டு முன்னேற்றமும், உலக சூழ்நிலைத் தோற்றமும், அதன் தொடர்பாடலும், யாழ்.சமூகத் தோற்றப்பாட்டில் புதியதொரு சூழ்நிலைத்தோற்ற வலைப்பின்னலை உருவாக்கியுள்ளது. இவ்வாறு உருவான சூழ்நிலை வரலாற்றையும், பின்னணிப் போக்கினையும், அதற்கு இணைவான சக்திகளையும் எடுத்து நோக்குகையில் - புதியதொரு பாதாள உலகம் தோன்றுவதற்கான சூழ்நிலைத் தோற்றப்பாடுகளுக்கான வெளி நிலைச் சக்திகள் தென்படுவதை உணரக் கூடியதாக உள்ளது.

இத்தகைய தோற்றப்பாடுகளுக்குப் பிரதான காரணமாக அமைவது - போர் ஓய்வால் ஏற்பட்ட நிர்வாகமுறைத் தளம்பல் போக்காகும். யாழ்.குடாநாட்டினைப் பொறுத்தவரை, போர் ஓய்வின்பின் சிவில் நிர்வாகத்தினைப் பொறுப்பேற்கவேண்டிய கடமை தங்களிடமே உள்ளது என்பது பொலிஸாரின் வாதமும், உண்மைநிலையுமாகும். ஆனால், அரச இராணுவ அமைப்போ, இப்பிரதேசமானது படையினரின் பூரண கட்டுப்பாட்டில் உள்ளதால், தமது சுய பாதுகாப்புக்கருதி, தாமும் நிர்வாக நடவடிக்கைகளில் பங்கெடுக்க முனைகின்றது.

இது இவ்வாறிருக்க, இந்தப் பிரதேசமானது - முற்றுமுழுதாகத் தமிழ்ப்பிரதேசமாக அமைவதால், அதன் கலாசார மாண்பினைக் கட்டிக்காத்தல் தமது கடமையெனப் புலிகள் கருதுகின்றனர். அத்தோடு, அரச நிர்வாகத்தில் நம்பிக்கை இழந்த பொது மக்கள் - தமது முறைப்பாடுகளைப் புலிகளிடமே எடுத்துச் சென்று தீர்வு வேண்டி நிற்கின்றனர். இத்தகைய சூழ்நிலைத் தோற்றப்பாடானது - யாழ்.மக்களின் பாதுகாப்பு மற்றும் சமூகம் தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்வதில், 'மும்முனைத்தாக்கம்' ஏற்படாலயிற்று.

இதனால், பாதிக்கப்பட்ட அல்லது இந்தச் சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்தத் தெரிந்த, ஒன்றுபட்ட குழுக்கள் அல்லது பொதுஜனங்கள் தமது பிரச்சினைகளுக்கான தீர்வினைத் தாமே கையாளமுற்பட்டனர். இந்தச் செயற்பாடானது, நீதியை நிலைநாட்ட விரும்பும் உயர் அமைப்புக்கள் மற்றும் அதிகார அமைப்புக்கள் என்பவற்றினிடையே பெரும் குழப்பகரமான சூழ்நிலை வெளிப்பாட்டினைத் தோற்றுவித்தது எனலாம்.

இதன் பயனாகக் குழுமோதல், வாள் வெட்டு, ஆட்கடத்தல் எனத் தொடர்ந்து, உச்சக்கட்டமாக நிலக்கண்ணிபுதைப்பு மற்றும் துப்பாக்கிச்சூடு எனும் நிலைவரை சென்றன. இதற்கான பின்னணியினை ஆய்வுசெய்த போது, பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்தன.

ஒப்பந்தத்தின் பிரகாரம் பல இராணுவ மினி முகாம்கள் மூடப்பட்டதோடு, பாதுகாப்பு நிலைகளிலும் தளர்வு காணப்பட்டது. இதன் பயனாக மூடப்பட்ட இராணுவ முகாம்களில் பலவெடிபொருட்கள் கைவிடப்பட்ட நிலையில், அநாதரவாகக் காணப்பட்டதுடன், பாதுகாப்பு அணைக்கட்டு அருகில் பெருமளவு மிதிவெடிகளும் விதைக்கப்பட்டிருந்தன.

இத்தகைய சூழ்நிலைகளைச் சாதமாகப் பயன்படுத்தக் கற்றுக்கொண்ட சமூகவிரோதக் கும்பல்களும் மற்றும் தீய எண்ணம் கொண்ட பொதுமக்களும் தனியாக அல்லது கூட்டாக இத்தகைய வெடிபொருட்களினை அபகரித்து தம்வசப்படுத்தினர்.

இவ்வாறு சேகரிக்கப்பட்டு பதுக்கிவைக்கப்பட்ட வெடிபொருட்களை, பிற்காலத்தில் தமது தேவைக்கு ஏற்ப கொலை, கொள்ளை, பழிதீர்த்தல் என்பவற்றுக்காகப் பயன்படுத்தத் தொடங்கினர்.

இதற்கு எடுத்துக்காட்டாக இந்த ஆண்டில் இடம்பெற்ற, கொடிகாமத்தில் ஒரு குடும்பப் பெண்ணும் அவரது பிள்ளைகள் மீதும் நட்டநடு இராத்திரியில் இடம்பெற்ற குண்டு வீச்சு, நெல்லியடி வர்த்தகர்களுக்கான மிதிவெடிச்சம்பவம் மற்றும் கரவெட்டியில் இடம்பெற்ற சந்தைக் குத்தகை வியாபாரிமீதான துப்பாக்கிச் சூட்டு மரணம் என்பன போன்ற பலவற்றினைக் குறிப்பிட்டுக்கொண்டு போகலாம்.

இத்தகைய நிலைப்பாட்டிற்கு இடைவிலகல் காரணியாக சில அமைப்புக்கள் பின்னணியில் இருப்பது அதிர்ச்சிக்குரிய விடயம். எனினும், இவை மக்களால் எதிர்பார்த்ததொன்றாகும். ஏனெனில், இப்படிப்பட்ட சம்பவங்களோடு தொடர்புடையவர்களுக்கு சில அல்லது பல குழுக்கள் நேரடி அல்லது மறைமுக ஆதரவு காட்டுவதோடு, இவர்களுக்கு இத்தகைய விடயங்களில் ஆயுத வகைகளை கையாளக் கற்றுக்கொடுப்பதும் தெரியவந்துள்ளது. இத்தகைய நிலைப்பாடானது, இந்தச் செயலில் ஈடுபடும் எந்தக் குழு அல்லது அமைப்பாக இருந்தாலும் அவர்கள் மீது பாதுகாப்பு வேண்டிநிற்கும் கௌரவமான சமூகத்திடையே ஓர் காழ்ப்புணர்வினைத் தூண்டிவிட்டது எனலாம்.

இந்தச் சக்திகள் அனைத்தும் சில அல்லது பல விடயங்களில் ஒன்றிணைந்தோ அல்லது பரவலாக்கப்பட்டோ அல்லது சிறு சிறு குழுக்களாகவோ இயங்க ஆரம்பித்தன. இவற்றில் சில தற்காலிகமானதாகவும், சில பருவகாலக் குழுக்களாகவும், சில நிரந்தரக் குழுக்களாகவும் இயங்கின அல்லது இயங்கிக்கொண்டிருக்கின்றன. என்பது ஆய்வின் மூலம் தெளிவாகின்றது.

மேற்கூறப்பட்ட குழுக்கள் அனைத்தும் ஒன்றிணைந்தோ அல்லது தனித்தோ எதிர்காலத்தில் பாதாள உலக கும்பல்களை தோற்றுவிக்கும் அபாயச்சூழ்நிலை தோன்றியுள்ளது. இந்தநிலை உருவாக்கத்திற்கான காரணச்சூழல் பல யாழ்.குடாநாட்டில் நிலவுவதாலேயே இத்தகையதொரு கருத்தினை எதிர்வுகூறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனலாம்.

இந்தச் சூழ்நிலை உருவாக்கத்திற்கு இவற்றோடு, இன்னும் பல்வேறு காரணிகள் பக்க பலமாக அமைவதைக் காணலாம். இன்றைய போர் ஓய்வுச் சூழலானது, பலருக்கு பல வகையிலும் நன்மைபயப்பதாகவே உள்ளது. இவை வர்த்தகத் தொடர்பினை வளர்ப்பதோடு, அமைப்பு ரீதியான கட்டமைப்புக்களிலிருந்து உறுப்பினர்கள் இடைவிலகுவதை ஊக்கப்படுத்துவதாகவும் அமைகின்றது.

அத்தோடு இந்த ஓய்வு நிலையானது, படை பலமானது, உற்பத்திக்கு பயன்படாத (தேசிய வருவாயை பெருமளவில் உறுஞ்சும்) 'முறுக்கேற்றப்பட்ட மனித வளமாக' மாற்றம்காண வழிவகுக்கின்றது எனலாம். இவ்வாறு மாற்றம் கண்ட மனித வளமானது, எதிர்காலத்தில் எத்தேவைக்கும் பயன்படுத்தாது வீணே வைத்திருப்பதால், அந்த வளம் சார்ந்தோருக்கும் விரக்தி மனப்பான்மையைத் தூண்டிவிடும். இவ்வாறு தூண்டப்பட்ட மனித சக்தியானது, 'விரக்தியுற்ற மனித வளமாக' மாற்றம்கண்டு, அவை பின் தமது அமைப்புக்களிலிருந்து இடைவிலகலைத்தூண்டிவிடும்.

இவ்வாறு இடைவிலகல் பெற்ற மனித வளமானது - அதிகூடிய மனித சக்தியோடு, தொழில்நுட்ப ஆற்றலையும் கொண்டுள்ளதால், அதற்கு ஏற்ப தொழில்வாய்ப்புக் கிடைக்காது போனால், சமூக சீரழிவை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள தூண்டிவிடும். இவ்வாறு தூண்டப்பட்ட மனித வளமே இன்று தென்னிலங்கையில் பாதாள உலக கும்பல்கள் பெருக்கெடுக்க பிரதான காரணமாக அமைந்தன.

இதனை நாம் இன்று வெகுஜன ஊடகங்கள் மூலம் அறிந்துகொள்ளலாம். அதாவது, தப்பி ஓடும் படையினரின் வீதம் உயர்வதோடு - அவர்களால் தென்னிலங்கையில் களவு, கொள்ளை, பாலியல் வல்லுறவு, கொலை, ஆட்கடத்தல் எனப் பல சம்பவங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறே பல்வேறு அரசு சார்ந்த ஆயுதக் குழுக்களும் (துணைப்படைகள்) உறுப்பினர்களை போர் ஓய்வில் வைத்திருக்கும் போது, அவர்களது ஆற்றல் சோர்வுநிலை அடைகின்றது. இத்தகைய சோர்வுநிலை ஆற்றலானது மன வெளிப்பாட்டு மாற்றங்களை உண்டாக்கி உறுப்பினர் இடைவிலகலை ஏற்படுத்தலாம்.

இவ்வாறு விலகல் கொண்டவர்களுக்கு, அவர்களுக்குத்தகுந்த வாழ்வுநிலை (தொழில்/ திருமணம்) கிடைக்காதபோதும், அவர்கள் சமூக தாக்கங்களான பசி, பட்டினி என்பவற்றுக்கு ஆட்படுகின்றபோதும், அவர்களிடத்து இருக்கும் உடல் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சியின் விளைவால், தூண்டப்பட்ட மனநிலை மாற்றமானது விபரீதமான விளைவுகளை ஏற்படுத்திவிடலாம்.

அதாவது, இத்தகைய தூண்டல் பெற்ற உளநிலையானது, இவர்களிடத்தே ஒன்றிணைந்தோ அல்லது பலவாகவோ, குழு

(10 ஆம் பக்கம் பார்க்க)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*முடிவும் இடையூறும் முற்றிய ஆங்கு எய்தும்*
*படுபயனும் பார்த்துச் செயல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## இணக்கத்தை வலியுறுத்தும் அழுத்தம்

சிறிலங்காவில் ஆட்சியதிகாரத்தில் நேரெதிர் முனைகளாக விளங்குகின்ற ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையான அதிகாரப் போட்டியின் எதிரொலியாக எழுந்துள்ள அரசியல் குழப்ப நிலை காரணமாக, தேசம் எதிர் கொள்ளத் தொடங்கியுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வுகாணும் வகையில், முரண்பட்டுக் கொண்டிருக்கும் இரு பிரதான தலைமைகளுக்கிடையே இணக்கப்பாடொன்றை ஏற்படுத்தும் முயற்சிகள், தளர்வுகளுக்கும், நம்பிக்கையீனங்களுக்கும் மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் புரிந்துணர்வு இணக்கப்பாடானது ஏற்படுமாயின் உண்மையிலேயே இது இருதரப்பினரதும் மன ஒருமைப்பாட்டுடனான புரிந்துணர்வுடன்தான் மேற்கொள்ளப்படுமா என்பது சந்தேகத்துக்குரிய விடயமேயாகும்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான அரசியல் - அதிகாரவியல், கருத்தியல் முரண்பாடுகள் எதுவும் திடீரென, அண்மைக்காலத்தில் ஏற்பட்ட ஒன்றல்ல. இது அரை நூற்றாண்டு கால அரசியல் பகைமையை அடிப்படையாகக் கொண்டது.

பண்டாரநாயக்க - டட்லி சேனநாயக்க காலத்தில் ஆரம்பித்து சந்திரிகா - ரணில் காலம் வரை நீடித்து அதற்கு அப்பாலும் தொடரப்போகின்ற, அப்பட்டமாக அரசியல் அடிப்படையிலான, இந்த பகைமை அதியுச்ச அதிகாரப் பதவியை இலக்கு வைத்த ஒன்றாகும்.

ஆரம்பத்தில் பிரதமர் பதவியை இலக்குவைத்து, போட்டியில் ஆரம்பித்த இந்த அரசியல் பகைமை இப்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை தக்கவைப்பதிலும், கைப்பற்றுவதிலும் தொடர்ந்து வருகின்றது.

இந்த அதிகாரப் போட்டியில் நாட்டின் தேசிய நலன் களும், வளங்களும் இரு தரப்பினராலும் பணயப் பொருளாக பயன்படுத்தப்படுவதுதான் துயரம் தரும் விடயமாகும்.

குறிப்பாக இதனால், நாட்டின் தற்போதைய தேசிய நலனுடன் தொடர்புடைய பிரதான பிரச்சினையான சமாதான முன்னெடுப்புக்களுக்கு ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைக்கு ஜனாதிபதியே காரணம் எனப்பிரதமரும், பிரதமரை ஜனாதிபதியும் பரஸ்பரம் குற்றம் சாட்டி வருவது தெரிந்ததே.

ஆனாலும், இன்றைய அமைதி முயற்சிகளின் தேக்க நிலைக்கு, முக்கியமான தடையாக இருப்பது ஜனாதிபதியும், அவர் தலைமையிலான பொ.ஐ.முன்னணியும், தற்போது அவருடன் புதிதாக கூட்டுவைத்துள்ள ஜே.வி. பியும் தான் என்பது வெளிப்படையான விடயம்.

இவர்களின் இந்தச் சமாதான எதிர்ப்பு முயற்சிகளின் பின்னால் சில அந்நிய - அயலக சக்திகளும் இருக்கின்றன என்பதும் தற்போது நன்கு அறியப்பட்ட ஒன்றாகி விட்டநிலையில், சமாதான ஏற்பாடுகளை முன்னின்றும், பின்னின்றும் இதுவரை காலமும் மேற்கொண்டு வந்த சர்வதேச சமூகம் - குறிப்பாக நோர்வே, ஜப்பான், பிரிட்டன், அவுஸ்ரேலியா, கனடா, பிரான்ஸ் போன்ற நாடுகளும், அமெரிக்காவும், இலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்களுக்கான அதிகாரபோட்டியின் காரணங்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பது, அவர்களின் அண்மைக்கால இலங்கை விவகாரம் தொடர்பான கருத்துநிலை வெளிபாடுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்தவாரங்களில் அமெரிக்காவின் ரிச்சார்ட் ஆர்மிரேஜ் அவர்களும், ஜப்பானின் விசேட தூதுவர் யசுசி அகாஷியும் - சிறிலங்கா அரசின் ஆட்சியை ஆளுக்காள் அவரவர் அதிகாரங்களின் போக்கில் நகர்த்தமுயலும் ஜனாதிபதியையும், பிரமரையும் விரைவிலேயே இணக்கம் ஒன்றிற்கு வருமாறும், இத்தகைய முரண்நிலை இருவருக்குமிடையே தொடர்வதைத் தாம் எந்த வகையிலும் விரும்பவில்லை என்றும், இந்த நிலையில் இரு தரப்பும் மோதிக் கொள்வதன்மூலம், சமாதான முன்னெடுப்புக்களை புறம் தள்ளிவைப்பதை - சர்வதேசம் நீண்டகாலத்திற்கு சகித்துக்கொள்ளமாட்டாது என்றும், கடுமையான வார்த்தைப் பிரயோகங்களைப் பிரயோகித்துள்ளமையைக் கருத்தில் கொண்டால், சிறிலங்காவின்மீதான சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தின் வலுவைப் புரிந்துகொள்ளமுடியும்.

இந்தச் சூழலில், சமாதான முயற்சிகளை ஆரம்பம் முதலே கடுமையாக எதிர்த்துவந்த ஜே.வி.பியுடன் சந்திரிகா கூட்டணி அமைத்ததையடுத்து, ஜனாதிபதி மீதான சர்வதேச அபிப்பிராயம் பெருமளவிற்கு மாறியுள்ள நிலையில், அவருக்கான அழுத்தமும் அதிகரித்துள்ளதாகத் தெரிகிறது.

இந்த அழுத்தம் சிறிலங்காவின் எதிர்கால அபிவிருத்திப் பணியை மையப்படுத்தியே கொடுக்கப்படுவதால், ரணில் - ஜனாதிபதி தனது இறுதி நிலைப்பாட்டை எதிர் வரும் 17 திகதிக்குமுன், அதாவது வொஷிங்ரனில் நடைபெறவுள்ள நிதி மற்றும் கடன் வழங்கும் நாடுகளின் மாநாட்டின்முன், எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளமைக்கும், அதுவே காரணமாகியுமுள்ளது.


எனவே ஏதோவொரு வகையில் சந்திரிகா இன்றைய நெருகடிக்கு முடிவு கட்ட ரணிலின் அரசுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்பது மட்டும் உறுதி.

சந்திரிகா என்ன வகையிலான முடிவொன்றை எடுக்கப்போகிறார்?

ரணிலுடன் இணக்கப்பாடொன்றுக்கு வந்தால், புதிய ஜே.வி.பி.யுடனான கூட்டணி கேள்விக்குறியாகிவிடும். வராவிட்டால் சர்வதேச அழுத்தத்தை மேலும் கடுமையாக எதிகொள்ள வேண்டிவரும் என்பது நிச்சயம்.

இந்த நிலையில் அடுத்து வரும் நாட்கள் சிறிலங்கா அரசியலில் முக்கியத்துவமிக்க நாட்களாக அமையவுள்ளது என்பது மட்டும் உண்மை.

## நாடும் நடப்பும்




செய்தி : வரும் 18 ஆம் திகதிக்குள் அரசியல் நெருக்கடி தீர்க்கப்படாவிடில் எமது நாட்டிற்குப் பெரும் பாதிப்பு ஏற்படும்.

- ரணில் -

# புலிகள் மீதான தடையை பிரிட்டன் நீக்கவேண்டும்!

### அமைச்சர் மகேஸ்வரன் பிரிட்டிஷ் தூதுவரிடம் வேண்டுகோள்

விடுதலைப் புலிகளால் பிரிட்டனுக்கு எதுவித பாதிப்பும் இல்லாத காரணத்தினால், பிரிட்டனில் புலிகள் இயக்கம் மீதான தடையை விலக்க முன்வரவேண்டுமென, அமைச்சர் மகேஸ்வரன் வேண்டுகோள் விடுத்தார்.

அமைச்சர் மகேஸ்வரனை பொதுநலவாய அமைப்புக்களின் தெற்காசியப் பிரிவின் இலங்கை விவகாரத்துக்கான அதிகாரி கத்தரின் கிறிசும், இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீவன் இவன்சும் நேற்றுக்காலை கொழும்பிலுள்ள இந்து கலாசார அமைச்சு அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்கள். அதன்போதே, இந்தக் கோரிக்கையை அமைச்சர் மகேஸ்வரன் விடுத்ததோடு ரொனி பிளேயருக்குக் கடிதம் ஒன்றையும் கொடுத்தனுப்பினார்.

இந்தச் சந்திப்பின் போது, அமைச்சர் மகேஸ்வரன் இலங்கையில்கூட, புலிகள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது. அந்த நிலையில் புலிகளால் எந்தப் பாதிப்பும் அடையாத பிரிட்டனில் புலிகள் மீதான தடையை நீடிப்பது மனவருத்தத்திற்குரிய விடயமாகும் எனத் தெரிவித்தார்.

இதுவிடயமாக பதிலளித்த பிரிட்டிஷ் தூதுவர், விடுதலைப் புலிகள் தமது கரும்புலிகள் படைப்பிரிவை கலைத்துவிடுவதுடன் தீவிரவாத நடவடிக்கைகளை முற்றாக கைவிட வேண்டும். இதுதொடர்பாக பிரிட்டனுக்கு திருப்தியேற்பட்ட பின்னர் தடையை விலக்குவது தொடர்பாக பரிசீலிக்கமுடியும் எனத் தெரிவித்தார்.

அமைச்சர் மகேஸ்வரன் கொண்டுவரவுள்ள மதமாற்றத் தடைச்சட்டம் பற்றியும் இந்தச் சந்திப்பின் போது, பிரிட்டிஷ் தூதுவரினால் கேட்டறியப்பட்டது. மதமாற்றத் தடைச்சட்டமானது ஏனைய மதங்களை இழிவுபடுத்தவதற்காக கொண்டுவரப்படவில்லை. போரினால் பாதிப்புற்ற வறிய மக்களுக்குப் பணத்தாசையைக்காட்டி, கட்டாயமாக மத மாற்றும் நடவடிக்கையை எதிர்த்தே கொண்டுவரப்படவுள்ளது.

இதுதொடர்பாக இறுதிமுடிவு இதுவரை எடுக்கப்படவில்லை. தீவிரமான ஆலோசனைகளின் பின்னரேயே, இறுதிமுடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்த அமைச்சர் மகேஸ்வரன் - பிரிட்டனில் தங்கியுள்ள இலங்கையர்கள், மரணவீடு போன்ற அவசரதேவைகளுக்காக இலங்கை வருவதற்கு இலகுவான முறையில் பயண அனுமதிகளை பிரிட்டன் வழங்கவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

ஜனாதிபதியின் தற்போதைய நடவடிக்கைகள் தொடர்பாகவும், பிரிட்டிஷ் தூதுவர் - அமைச்சர் மகேஸ்வரனின் நிலைப்பாடுகளைக் கேட்டறிந்துகொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(ச)

# சுகாதாரமற்ற முறையில் இயங்கிய உணவகத்தின் உரிமையாளரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவும்!

### யாழ்.மாவட்ட நீதிவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

சுகாதாரமற்றமுறையில் உணவுப்பொருட்கள் விற்பனை செய்துவந்த உணவகம் ஒன்றை, சீல்வைத்து மூடும்படியும், அதன் உரிமையாளரை உடனடியாகக் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தும்படியும் பொலிஸாருக்கு நீதிவான் இ.த.விக்னராஜாவால் உத்தரவிடப்பட்டது.

யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள உணவகம் ஒன்று சுகாதாரச் சீர்கேடான வகையில் இயங்கிவந்தது. இந்தக் கடையைப் பரிசோதித்த யாழ்.மாநகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பதினான்கு நாட்களுக்குள் கடையை மறுசீரமைக்கும்படியும், இலலாவிடில் வழக்குத்தாக்குதல் செய்யப்படுமெனவும் தெரிவித்தார். இதனைக் கவனத்திற்கொள்ளாது இருந்தமையினாலேயே, தற்போது கடையைச் சீல்வைக்கவேண்டிவந்தது.

இது தொடர்பான விசாரணைகள, நேற்றுமுன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றபோது - கடை உரிமையாளர் விசாரணைகளுக்குச் சமுகமளிக்கவில்லை இதனால், இவரைக் கைதுசெய்யப் பிடியாணை பிறப்பித்த நீதிவான் - கடையைச் சீர்செய்யும்வரை இதனை மூடும்படியும் உத்தரவிட்டார்.

இந்த உணவகமானது - பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் நிபந்தனைக்குட்படத்தக்கவகையிலே செய்யப்படவேண்டுமெனவும், அது தொடர்பான அறிக்கையை நீதிமன்றுக்குச் சமர்ப்பித்து, மன்று அதனை ஏற்றக்கொள்ளும் பட்சத்திலேயே, கடையை மீண்டும் திறக்க அனுமதிக்கமுடியும் எனவும் நீதிவான் தனது உத்தரவில் தெரிவித்தார். (ச)

# கலைப்பீட புகுமுக மாணவர்களுக்கான அறிமுக வகுப்புக்கள் இன்று ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீட புகுமுக மாணவர்களுக்கான அறிமுக வகுப்புகள் - இன்று ஆரம்பமாகவுள்ளன. இன்று காலை 9 மணிக்குப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ள இந்த அறிமுக வகுப்புக்கு, கலைப்பீட பதில் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமை தாங்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் - பதில் துணைவேந்தர் கலாநிதி சிவபாலன், பல்கலைக்கழகப் பிரதம பதிவாளர் ஏ.தங்கராஜா, பிரதம நூலகர் எஸ். பரராஜசிங்கம், பல்கலைகழக மாணவ ஒன்றியத் தலைவர் எஸ்.பகீரதன், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ரி.வசீகரன் ஆகியோர் பல்கலைக்கழக நடைமுறைகள் தொடர்பாகப் புகுமுக மாணவர்களுக்கு விளக்கமளிக்கவுள்ளனர்.

இன்று ஆரம்பமாகும் இந்த அறிமுக வகுப்புகள் - எதிர் வரும் 6 ஆம் திகதிவரை தொடரவுள்ளன. விவசாயபீட, மருத்துவபீட மாணவர்களுக்கான அறிமுக வகுப்புகள் ஏற்கனவே ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஏனைய பீடங்களினது வகுப்புகள், விரைவில் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று ஆம்பமாகும் கலைப்பீட மாணவர்களுக்கான அறிமுக வகுப்பில் கலந்துகொள்வதற்காகக் கலைப்பீட புதுமுக மாணவர்கள் அனைவரையும் காலை 8 மணிக்குப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிற்கு முன்னால் ஒன்றுகூடுமாறு பதிவாளர் கேட்டுள்ளார். (ச)

# விடுதலைப் புலிகளை இனியும் ஆதரிப்பீர்களா?

## வகையான கேள்வி... வழுக்காத வைகோ!

மேடை இல்லை, மைக் இல்லை, சால்வைகள் இல்லை, மாலைகள் இல்லையே தவிர, 'பொடா' நீதிமன்றத்தையே தான் முழங்கும் மேடையாக்கிவிட்டார் வைகோ!

தேர்ந்தெடுத்த வார்த்தைகளை அடி வயிற்றிலிருந்து எழும்பும் குரலால் வைகோ உச்சரித்தபோது, நீதிமன்றத்தில் திரண்டிருந்த ம.தி.மு.க தொண்டர்கள் உணர்ச்சி பெருக்கால் கண்ணீர் விட்டனர். நீதிமன்ற வரலாற்றில் புதுமையானதொரு காட்சி அது!

தன்னுடன் 'பொடா'வில் கைதான தோழர்கள் கணேசமூர்த்தி, பூமிநாதன் உள்ளிட்ட எட்டுப்பேரும் பிணையில் வெளியாகிவிட, ஐநூற்றுஐம்பது நாட்களுக்கும் மேலாக சிறையில் வாடும் வைகோ, பிணை கேட்டுக் கடந்த வாரம், பூந்தமல்லி 'பொடா' நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். நூற்றுக் கணக்கான சட்டத்தரணிகள் ஆஜராகி வாதாடத் தயாராக இருந்தாலும், 'நானே வாதாடுகிறேன்' என்று வைகோவே களமிறங்கினார்.

கடந்த புதன்கிழமை நீதிமன்றத்தில் சுமார் ஒன்றரை மணிநேரம் எடுத்துவைத்த வாதங்கள், அவரது மன உறுதிக்குச் சரியான சான்று!

நீதிமன்று ஆரம்பமானபோது, 'வைகோவுக்கு பிணை தரக்கூடாது' என்றபதில் மனுவை அரச தரப்பு சிறப்பு வழக்கறிஞர் ஜெயக்குமார், நீதிபதி ராஜேந்திரனிடம் தாக்கல் செய்ததும், அதன் ஒரு நகல் வைகோவுக்குத் தரப்பட்டது!

'இதைப் படிக்கச் சிறிது நேரம் கால அவகாசம் எடுத்துக்கொள்ளுங்கள்' என்று நீதிபதி சொன்னதும், தனது சட்டத்தரணிகளான தேவதாஸ், தினகரன், நன்மாறன் ஆகியோரை அருகில் வைத்துக்கொண்டு, வேகமாக அதைப் படித்தார். சில இடங்களை அடிக்கோடிட்டும் வைத்துக்கொண்டார்!

'இந்தப் பதிலை வாங்கி, அதற்கான மறுப்பு வாதங்களைத் தயாரிக்க, வைகோ ஒரு நாளாவது அவகாசம் கேட்பார்' என்று அரசுத்தரப்பு எதிர்பார்த்திருக்க, வைகோ உடனேயே வாதம் செய்யத்தயாராகிவிட்டார். உடனே, அரச தரப்பு சட்டத்தரணி எழுந்து, 'இந்த விசாரணையில் நான் வாதாடப்போவதில்லை. சட்டத்தரணி ஜெனரல் தான் வாதாடப் போகிறார். அவர் இன்று இல்லை. அநேகமாக வரும் 27 ஆம் திகதி ஆஜராவார்' என்று சொல்ல ம.தி.மு.கவினருக்கு அதிர்ச்சி.

'வைகோ பேசி, அரச சட்டத்தரணி பதில் சொல்லிவிட்டால், இன்று மாலைக்குள்ளேயே பிணை மனு மீது தீர்ப்பு வந்துவிடும் என்று நினைத்தோம். வேண்டுமென்றே காலம் கடத்துகிறார்களோ' என்று ம.தி.மு.க. சட்டத்தரணிகள் முணுமுணுத்துக் கொண்டிருக்க, அது பற்றியெல்லாம் கவலைப்படாமல், தனது ஆசனத்திலிருந்து எழுந்து, நிறைய ஆவணங்களுடன் நீதிபுதி முன்வந்து நின்றார் வைகோ.


இதுவரை 24 தடவை சிறைக்குச் சென்றிருக்கிறேன். ஒரு தடவைகூட பிணை மனு போட்டதில்லை. இந்தத் தடவைதான் போடுகிறேன் என்று முன்னுரை கொடுத்தவர். திருமங்கலம் கூட்டத்தில், பேசியதற்காகத்தான் என்மீது 'பொடா' பாய்ந்துள்ளது. ம.தி.மு.க தொடங்கி ஒன்பதாண்டுகள் அதையொட்டி நடந்த கூட்டம் அது. மற்றும், தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவாக அந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்படவில்லை.


அந்தக் கூட்டத்தில், 90 நிமிடம் பேசினேன். அந்தக் கூட்டத்தில் புலிகளைப் பற்றி மட்டுமா பேசினேன். தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பற்றிப் பேசினேன். இளைஞர்களின் எதிர்காலம் பற்றிப் பேசினேன். எங்கள் ஆசான் பேரறிஞர் அண்ணாவின் கனவான சேது சமுத்திரத்திட்டம் பற்றிப் பேசினேன். என்று, வைகோ சொல்லிக்கொண்டிருந்தபோது, அரச தரப்பு சட்டத்தரணி ஜெயக்குமார் எழுந்து பிணை மனுவுக்குச் சம்பந்தமில்லாத விடயங்களைப் பேச அனுமதிக்கக் கூடாது என்றார். உடனே சூடானார் வைகோ.

என்னால் இந்த நாட்டுக்கு அச்சுறுத்தல், நான் வன்முறைவாதி என்று சித்திரிக்கும்போது, அதற்கான முழுமையான பதிலைச் சொல்வது என்னுடைய கடமை. குஜராத் சம்பவம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நடந்த விவாதத்தையும், திருமங்கலம் கூட்டத்தில் கூறினேன். அப்போதுதான் நான் விடுதலைப் புலிகளை நேற்றும் ஆதரித்தேன், இன்றும் ஆதரித்தேன், நாளையும் ஆதரிப்பேன் என்றேன். நாடாளுமன்றத்தில் சொன்னதையே திருமங்கலத்தில் சொன்னேன் என்றார்.

நேற்று, இன்று சரி! நாளையும் விடுதலைப் புலிகளை ஆதரிப்பீர்களா? என்று நீதிபதி ராஜேந்திரன் குறுக்கிட்டார். தோளில் புரண்ட கறுப்புச் சால்வையை கம்பீரமாக இழுத்துவிட்டுக்கொண்டு, சடக்கென்று மூக்குக் கண்ணாடியைக் கழற்றிய வைகோ - நீதிபதியைப் பார்த்து, நான் நின்று, நிதானித்து, நன்றாகச் சிந்தனை செய்துதான் இதைச்சொல்கிறேன். நான் சராசரி அரசியல்வாதி அல்ல. சொன்னதை மாற்றிச் சொல்வதற்கு? என்றதோடு,

விடுதலைப் புலிகள் தமிழர் உரிமைக்காக ஆயுதப் போராட்டம் நடத்தினார்கள். அரசியல் சூழல் மாறி, அங்கு அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்கியிருக்கிறது. இந்தப் பேச்சை இந்தியாவும் வரவேற்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், தமிழ்மக்கள் மத்தியில் பேசும் நான் புலிகளைப் பற்றிப் பேசாமல் எப்படித் தவிர்த்திருக்க முடியும் என்று, கேள்வியும் எழுப்பினார் வைகோ.





பிரபாகரனைக் கைதுசெய்யவேண்டும் என்று தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தை எதிர்த்து வைகோ பேசியதும் அவர்மீதான குற்றச்சாட்டுக்களில் ஒன்று.

இதற்குப் பதில் அளித்த வைகோ, திருச்சி 'தினமலர்' பத்திரிகையில் இந்தத் தீர்மானம் பற்றிக் கருத்துக் கணிப்பு நடத்தினார்கள். ஐம்பத்தேழு சதவிகிதம் பேர் இந்தத் தீர்மானம் தேவையற்றது என்று வாக்குப் போட்டார்கள். இவர்களையும் பொடாவில் போடுவீர்களா? என்று அடுத்த கேள்வியை எழுப்பினார். மூன்றாவதாக அவர் எழுப்பிய கேள்விதான் நீதிமன்றத்தை சடக்கென நிமிர வைத்தது.

உயிருக்குப் போராடிக்கொண்டு, இரண்டு கிட்னியும் செயல்படாத நிலையில், புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் - இந்தியாவுக்கு சிகிச்சைக்கு வரத்தயாராக இருந்தார். இதைப்பற்றி நிருபர்கள் பிரதமரிடம் கேட்டபோது, ஆம், அவருக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவலாம் என்றார் பிரதமர். தடைசெய்யப்பட்ட இயக்கத்தின் அரசியல் ஆலோசகருக்கு ஆதரவாகப் பேசியதற்காக, சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்ற அடிப்படையில், பிரதமரையும் பொடாவில் போடுவீர்களா? என்று வைகோ தனது பார்வையின் கூர்மையைத் தீட்டிக் கொண்டு நீதிபதியை நோக்கிக் கேட்டார் இந்தக் கேள்வியை!

பொடாவை எதிர்த்து தான் மேல் நீதிமன்றில் சமர்ப்பித்த மனுமீது நீதிபதிகள் அளித்த தீர்ப்பில், தடைசெய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவது தவறல்ல, பேச்சின் உட்பொருளும், நோக்கமும்தான் முக்கியம் என்ற பொருளில் நீதிபதிகள் குறிப்பிட்டதையும் ஏனைய பிணை வழக்குகளில் நீதிபதிகள் அளித்திருக்கும் தீர்ப்புக்களையும் எடுத்துக்காட்டிய வைகோ, தன் தரப்புவாதத்தை முடிக்கும்போதுதான் உச்சக் கட்டமாக உணர்ச்சிவசப்பட்டார்.

நாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும்படி நடந்தேன் என்றும், வன்முறையாளன் என்றும், என்மீது முத்திரை குத்துவதை என்னால் தாங்கிக்கொள்ள முடியாது. இந்தக் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி, இதுவரை என்மீது எந்த வழக்கும் தாக்கல் செய்ததில்லை. இதுவே முதல் வழக்கு.

கட்சியின் பொதுச் செயலாளரைக் கைது செய்துவிட்டார்களே என்று, என் கட்சியின் எந்தத் தொண்டனாவது கடைமீது கல் வீசினானா? பஸ்ஸைக் கொழுத்தினானா? ஆனால், அப்படிப்பட்ட வன்முறைச் சம்பவம் வேறுசிலர் விடயத்தில் நடந்ததே என்றதும், அதுபற்றிப் பேசவேண்டாம் என்றார் நீதிபதி.

கடந்த பத்து ஆண்டுகளாக நாங்கள் எத்தனையோ ஊர்வலங்களை நடத்தியிருக்கிறோம். ஒரு ஊர்வலத்திலாவது, வன்முறை நடந்த துண்டா? பிறகு எப்படி என்னை வன்முறையாளன் என்கிறீர்கள்? என்று வைகோ முடித்தபோது, இடிமழை பெய்து ஓய்ந்தது மாதிரியிருந்தது.

புன்னகையுடன் வைகோவைப் பார்த்த நீதிபதி ராஜேந்திரன், சட்டத்தரணி ஜெனரல் 27 ஆம் திகதிதான் பதில் வாதம் நடத்த விருக்கிறார். அந்தத் திகதிக்குத் தள்ளி வைக்கலாமா? என்று வைகோவிடம் நீதிபதி கேட்டார்.

அவர் ஏன் காலங்கடத்துகிறார் என்று எனக்குத் தெரியும் என்று வைகோ சிரித்தபடி சொல்லவும், 27 ஆம் திகதிக்கு ஏன் தள்ளி வைக்க வேண்டும்? நாளையே சட்டத்தரணி ஜெனரல் ஆஜராகட்டுமே என்று அரச தரப்பு சட்டத்தரணி ஜெயக்குமாரிடம் நீதிபதி தெரிவித்தார்.

நீதிபதி இவ்வாறு சொன்னதும், தி.மு.க தொண்டர்கள் ஒருசிலர் கைதட்டிவிட, அரச தரப்பு சட்டத்தரணி இதென்ன பொதுக்கூட்டமா? என்று ஆட்சேபம் எழுப்பினார்.

நீதிபதி ஏதோ சொல்வதற்கு வாயெடுக்கும் முன், நான் இதற்குப் பொறுப்பேற்று வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார் வைகோ. நாளைக்கு சட்டத்தரணி ஜெனரல் வந்துவிட்டால், அவர் தரப்பு வாதத்தை வைத்து முடிந்ததும், மாலையே தீர்ப்பு வந்துவிடும் என்று உற்சாகப் பெருமிதத்தில் ம.தி.மு.க தொண்டர்கள் மதிய உணவுக்குப் போனார்கள்.

சட்டத்தரணி ஜெனரலின் வாதத்தை 27 ஆம் திகதி வைத்திருப்பதாகவும், பின்பு செய்திவர, சற்றே சோர்வுடன் கலைந்தார்கள் தொண்டர்கள். தன் மனதில் சுழன்ற அத்தனை உணர்வு களையும் கொட்டி முடித்த திருப்தியோடு வேலூர் சிறைக்குக் கிளம்பினார் வைகோ. ❖

**நன்றி ஜூனியர் விகடன்**

# யாழ்ப்பாணத்திலும் ஒரு...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மங்கள் தோற்றம்பெறும், அவைபின் கூலிக்கு சமூகவிரோதச் செயற்பாட்டினை செய்யும் வன்முறைக் குழுக்கள் தோற்றம் பெறலாம். இவைபின் பாரிய பாதாள உலகக் கும்பல்களாக மாற்றம் காணும்நிலை தோன்றலாம்.

அதிகூடிய உடல்பயிற்சிகளையும் அதனூடாக கட்டுடலையும் பெற்றவர்கள், போர் ஓய்வால் அதி சொகுசாக வாழ்க்கைப்பட நேரிடுகின்றபோது, அவர்களின் உடல் நிலை மாற்றமானது உளரீதியான தடுமாற்றங்களை உண்டாக்கிவிடும்.

இவை மட்டும் ஒரு தற்துணிவான பாதாள உலகத்தினை முளைவிடச்செய்யும்எனக் கூற முடியாது. இவற்றுடன் கூடிய இன்றைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியும், இதனால் ஏற்பட்ட பல்லூடகங்களின் பெருக்கமும் பிரதான காரணங்களாக அமைகின்றன. இவைகளே இன்று வன்முறைப் பயிற்சி மையங்களாகவும், தீவிரவாதத்துக்கு கள அமைவு கொடுக்கும் மேடைகளாகவும் விளங்குகின்றன.

இன்றைய வெகுஜன ஊடகங்கள் பல கொலை, கொள்ளை, வன்முறைகள், பாலியல் அராஜகங்கள் என்பவற்றை நாள்தோறும் பறைசாற்றிய வண்ணமேயுள்ளன. இத்தகைய நிலையியலானது சிறுவர்தொட்டு முதியோர் வரை இது ஓர் நாளாந்த நிகழ்வு எனும் மன நிலை தோற்ற உருவாக்கம் என எண்ண வழி வகுத்தது.

இதனால், இப்படிப்பட்ட சம்பவங்கள் அனைத்தும் ஓர் சாதாரண நிகழ்வு எனும் மனோபாவத்தினை மனித சமூகத்தில் வேரூன்றிச் செய்தமையால் வன்முறை நிகழ்வினை இந்தச் சமூகம் எதிர்கொள்ளவேண்டியதாயிற்று. இத்தகைய நிகழ்வானது இளந்தலைமுறையினரை இப்படிப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடத் தூண்டியாக அமைகின்றது.

அத்தோடு இன்றைய வர்த்தக ரீதியான சினிமாக்களின் வெளியீடுகளும் வன்முறைப் பொதிவாகவே காணப்படுகின்றன. இவை உடற்கவர்ச்சி, பாலியல் வன்முறைகள் என்பவற்றினை பெரிதுபடுத்தியும் வெளிப்படையாகவும் காண்பிக்கின்றன. இத்தகைய காட்சி அமைவால் தூண்டப்பட்ட இளஞ்சமூகம் சினிமாத்தனத்தில் வன்முறைகளைப் புரிந்து அதற்காக அவர்கள் தண்டனைபெறும் போது விரக்தியுற்ற மனநிலை தோன்றி பாதாளக் கும்பல்களாகமாற வழிவகுக்கின்றது. இங்கு பழிதீர்க்கும் எண்ணமே மேலிட்டிருப்பதையும் அவதானிக்க முடியும் இதன்மூலம் ஏற்பட்ட வன்முறைத் தோற்றம் பின் தொழில் ரீதியாக மாற்றம் காணுகிறது எனலாம்.

எனவே சினிமாத் தயாரிப்பாளர்கள் லாப நோக்காக மட்டுமல்லாது சமூகப் பாதுகாப்பினையும் கருத்தில் கொள்ளல் சிறந்ததாகும். அவ்வாறு இல்லாது போனால் அவை தடை செய்யப்பட வேண்டியவைகளாகும். ஏனெனில் இத்தகைய சினிமாக்களைப் பார்வையிடும் விடலைப் பருவத்தினர் தமது சுயதேவைகளைத் தீர்த்துக்கொள்ள வன்முறைக் கும்பலை நாடுதல் அல்லது தாம் ஓர் குழுவினை உருவாக்குதல் போன்ற செய்பாடுகளில் இறங்குகின்றனர். இவை தீயசக்திகளின் வழிகாட்டலுக்குள் அகப்பட்டு பாதாளக் கும்பல்களாக மாற்றம் பெறலாம்.

இதனைப் போன்று தொலைக்காட்சி தொடர்களை எடுத்து நோக்குகையில் இவை தமது தொடர்களில் பல குற்றச் செயல்கள் இடம்பெறுவதைக் காட்டுவதும் அதிலிருந்து எவ்வாறு குற்றவாளிகள் தப்பித்துக்கொள்கின்றனர் என்பதைக் காட்டுவதாகவும் அமைகின்றன. இவை எதிர்காலத்தில் சமூகத்தில் காணப்படும் குற்றவாளிகளை மீண்டும், மீண்டும் குற்றம் புரிய தூண்டுவவையாகவேயுள்ளன.

மற்றும் இந்தத் தொடர்களில் பொலிஸ், நீதிபதிகள் என்போரை கைப்பொம்மைகளாகவும் இலஞ்சப் பேர்வழிகளாகவும் சித்தரிப்பதோடு இவர்களைவிட பாதாளக் கும்பல்களைக் கொண்டு தமது பழியினை இலகுவாக தீர்த்துக்கட்டலாம் என்ற மனஉணர்வினையும் தூண்டிவிடுகின்றன.

வேலையற்ற இளைஞர் தமது நாளாந்த செலவினைக் கட்டுப்படுத்தமுடியாமை, இதற்காகச் சிறந்த தொழில்வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளமுடியாமை என்பவற்றோடு, மது, புகைத்தல், போதைவஸ்து பாவனை போன்ற தீய பழக்கங்களுக்கு ஆட்பட்டு, அதிலிருந்து விடுபடமுடியாமல் தவிப்பதோடு, இதன் செலவினைச் சமன்செய்ய சிறுவழிப்பறிக் கொள்ளைகளைச் செய்யத்தூண்டப்படுகின்றனர்.


இந்த நிலையால், இவர்களுக்கு ஏற்பட்ட சமூக அவமதிப்பானது - இவர்கள் பாரிய நடவடிக்கைகளில் ஈடுபடத்தூண்டுகின்றன. இவை பின் தீய வழிகாட்டல்களுக்கு ஆட்பட்டு, பாதாளக் கும்பல் பிடியில் அகப்படலாம்.

எனவே, இவை அனைத்தையும் தொகுதது நோக்குகையில், இன்று தென்னிலங்கையில் காணப்படுவது போன்று, 'பாதாள உலகம்' ஆனது எதிர்காலத்தில் யாழ்.குடாநா:ட்டில் தோன்றும் அறிகுறிகள் தென்படுகின்றன.

அவ்வாறு தோற்றம்பெற்றால், எதிர்கால அரசியவாதிகள் அவற்றினைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தமுனையலாம். இந்த நிலையானது - எதிர்காலத்தில் நாட்டினை ஓர் அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்வதோடு, குழப்பகரமான ஓர் சமூக அமைப்பினைத் தோற்று வித்துவிடலாம். எனவே இதற்கு அடிப்படையான காரணிகளை இன்றே இனம் கண்டுகொள்வதோடு, அவற்றினை அடியோடு அகற்றிவிடுதலே சாலச்சிறந்ததாகும். ❖

# ஈராக்கில் அடுத்தடுத்து நடந்த இரண்டு குண்டுத்தாக்குதல்கள்

## மூன்று அமெரிக்கப் படையினரைப் பலியெடுத்தது



ஈராக்கில் பலூஜா நகருக்கு அண்மையில் நேற்று அமெரிக்க இராணுவ வாகனத் தொடரணிமீது நடத்தப்பட்ட பாரிய குண்டுத்தாக்குதல்களில் மூன்று அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டனர். மேலும், ஒருவர் காயமுற்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

பக்தாத்துக்கு 50 மைல் மேற்காகவுள்ள கல்டியா என்ற இடத்தில், அமெரிக்கத் தொடரணிமீது வீதியோரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டுமூலம் தாக்குதல் நடத்தப்பட்டது. குண்டுத்தாக்குதலுக்கு இலக்கான அமெரிக்க இராணுவ வாகனம் தீப்பற்றி எரிந்ததாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தையடுத்து இப்பகுதிக்கு உதவிக்காக விரைந்த அமெரிக்க இராணுவவாகன அணிமீது இரண்டாவது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் அந்த அமெரிக்க இராணுவ வாகனம் தீப்பிடித்து எரிந்தது.

தமது இராணுவ அணி ஒன்று பலூஜாவில் தாக்குதலுக்கு உள்ளானதை அமெரிக்க இராணுவ அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர்.

இந்தத் தாக்குதல்களில் மூன்று அமெரிக்கப் படையினரும், இரு ஈராக்கியர்களும் கொல்லப்பட்டதாகவும், ஒரு அமெரிக்கச் சிப்பாய் காயமுற்றதாகவும் அமெரிக்க இராணுவ மத்திய கட்டளைப் பணியகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். கடந்த சனியன்று இதேயிடத்தில் நடந்த வேறுவேறு தாக்குதலில் 2 அமெரிக்க படையினர் கொல்லப்பட்டதும், மேலும் மூவர் காயமுற்றதும் குறிப்பிடத்தக்கது.

## இந்த ஆண்டின் இறுதிக்குள்

# ஒஸாமா, முல்லா ஒமர் கைதுசெய்யப்படுவர் அல்கெய்டா தலைமைத்துவம் அழிக்கப்படும்!

## கூட்டுப்படை அதிகாரி சூளுரை

ஒஸாமா பின்லேடன் மற்றும் முன்னாள் தலிபான் தலைவர் முல்லா ஒமர் ஆகிய இருவரையும் இந்தவருட இறுதிக்குள் கைது செய்து சட்டத்தின்முன் நிறுத்தப்போவதாக ஆப்கானிஸ்தானில் அமைந்துள்ள அமெரிக்க கூட்டுப்படைகளின் தளபதி டேவிட் பானோ தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பினைச சட்டமாக்குவதற்கு ஆபகான் இடைக்கால ஜனாதிபதி கமிட் ஹர்சாய் கையொப்பமிடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டபோதே டேவிட் பானோ இதனைத் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டிருக்கும் 110 ஆயிரத்திற்கும் மேற்பட்ட படையினரில் அதிகமானவர்கள் அமெரிக்கர்கள். இவர்கள் அல்கெய்டா மற்றும் முன்னாள் தலிபான் அங்கத்தவர்களுக்கெதிராகப் போராடிவருகின்றனர்.



படைத்தளபதி டேவிட் பானோ பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் - முழு உலகத்திற்குமே இவ்விருவரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகத் தெரிவித்தார். கடந்த 6 மாதங்களில் 500 இற்கு மேற்பட்ட மக்கள் அல்கெய்டா மற்றும் தலிபான் போராளிகளின் தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்..

ஆப்கானிஸ்தானில் நடத்தப்படவுள்ள தேர்தலில் இவ்விரு அமைப்புக்களின் அச்சுறுத்தல்கள் அதிகரிக்கப்படலாமென அவர் கருதுகின்றார். ஆப்கானிஸ்தானில் அதிகரித்துவரும் போதைவஸ்துக் கடத்தலைத் தடுப்பதற்கு - அமெரிக்க அரசு தீவிரமாகப் போராடப்போவதாகவும் இராணுவ அதிகாரி மேலும் தெரிவித்தார்.

உலக நோக்கு

## சட்டவிரோத அடுக்குமாடிகளால் எகிப்தில் தொடரும் உயிரிழப்புகள்

### நசர் நகரில் 8 பேர் பலி

(கெய்ரோ)

எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் நசர் நகரில் தொடர்மாடிக் கட்டடம் ஒன்று தீப்பற்றி எரிந்து வீழ்ந்ததில் எட்டுப்பேர் உயிரிழந்தனர்.

இறந்தவர்களில் 6 பேர் பொலிஸ், தீயணைப்புப் படைகளைச் சேர்ந்தவர்களெனவும், தீயைக்கட்டுப்படுத்துவதற்கு முயற்சியை மேற்கொண்டவேளையில் அவர்கள் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நசர் நகரில் அமைந்துள்ள இந்தத் தொடர்மாடிக் கட்டடம் நொருங்கி வீழ்வதற்கு கட்டடத்தின் கீழ்மாடியில் ஏற்பட்ட தீவிபத்தே காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

4 மாடிகளைக் கட்டுவதற்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டிருந்ததாகவும், அதனையும் மீறி 7 மாடிகள் அனுமதியின்றிக் கட்டப்பட்டதனாலேயே கட்டடம் தீப்பிடித்தவுடன் நொருங்கி வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டடத்தின் அடிப்பாகத்தில் அமைந்திருந்த நில அறையில் வெடிபொருட்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்ததாகவும், அவை வெடித்ததன் மூலமே தீ பரவியிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

12 ஆண்டுகளுக்கு முன்னரே கட்டடத்தை அகற்றுவதற்கான அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், கட்டடம் அகற்றப்படவில்லை.

இடிபாடுகளுக்கு மத்தியில் மேலும் பலர் சிக்குண்டிருக்கலாம் எனவும், இதனால் தேடுதல் பணிகள் அங்கு தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எகிப்தில் கட்டடங்கள் உடைந்து விழுவது பொதுவான நிகழ்வு எனவும், அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையைவிட கூடுதலான மாடிக்கட்டடங்கள் சட்டவிரோதமாகக் கட்டப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

# அமெரிக்க ஆட்சிமாற்றத் திட்டம்; சியா முஸ்லிம்கள் கடும் எதிர்ப்பு!

## தேர்தல் நடத்துமாறு கோரிக்கை

(பாக்தாத்)

ஈராக்கில் தேர்தல் ஒன்றை நடாத்துவதற்கான சாத்தியங்களை ஆராய்வதற்கு குழு ஒன்றை அனுப்பவுள்ளதாக, ஐக்கிய நாடுகள சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் அங்கீகாரம கிடைத்தவுடன் தூதுக்குழு அங்கு செல்லவுள்ளது.

அமெரிக்க அரசு தேர்தல்கள் இன்றி ஆட்சி அதிகாரங்களை ஈராக்கியர்களிடம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ள திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஈராக்கிலுள்ள சியா முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபை தனது நிலைப்பாட்டை தெரிவிக்கும்வரை ஆர்ப்பாட்டங்களை நிறுத்துமாறு தமது ஆதரவாளர்களை சியா முஸ்லிம்களின் தலைவர் ஆயத்துல்லா அலி கேட்டுள்ளார். தேர்தல் மூலம் ஆட்சி மாற்றம் ஏற்படவேண்டுமென சியா முஸ்லிம்கள் கோரி வருகின்றனர்.

ஈராக்கில் ஆட்சி அதிகாரத்தில் உள்ள சபையும், ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாகி போல் பிரமரும் இணைந்து ஐக்கிய நாடுகளின் குழுஒன்றை ஈராக்கிற்கு அனுப்புமாறு கேட்டிருந்தார்கள்.

ஆனால், ஈராக்கில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களின பின், ஈராக்கிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் பணியாற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகள இருவரையும் அமெரிக்கா திருப்பி அழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



## ஊர்சுற்றி எழுதுவது

கைவிடப்பட்ட எறிகுண்டுகள் எந்த இடத்தில், எந்தச் சமயத்தில் வெடிக்கும் என்று தெரியாமல் வெடித்து விடுகின்றன. இது பெரிய ஆபத்தாக இருக்கின்றன. இதனால் பொலிஸாருக்கு பெருத்த தலையிடி ஏற்படுகிறதாம்.

இப்படியொரு செய்தியை கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலத் தினசரியொனறு முதல் பக்கச் செய்தியாக வெளியிட்டிருக்கிறது.

பதினெட்டு வருடம் போரின் விளைவுகளில் இதுவுமொன்று. இதற்கும் பொது மக்கள் முகம் கொடுக்கவேண்டியிருக்கிறதாம்.

கைவிடப்பட்ட எறிகுண்டுகள் வெடித்ததால் கடந்தவருடம் அதாவது 2003 ஆம் ஆண்டில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனரென்றும், முப்பது பேர் காயமடைந்தனறென்றும் அச் செய்தி தெரிவிக்கிறது.

எப்பாவல என்ற இடத்தில் ஐந்து குழந்தைகளும், ஹபரணையில் மூன்று குழந்தைகளும், பொலனறுவையில் இருவரும் கொல்லப்பட்டனரென்று பொலிஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கல்கமுவ, ஹொரணை, சிலாபம் மற்றும் புத்தளம் பகுதியிலும் பலர் இந்தக் க்கைவிடப்பட்ட எறிகுண்டுகளால் கொல்லப்பட்டிருக்கிறார்களாம்.

கைவிடபபட்ட இராணுவ முகாம்களுக்குச் சமீபத்திலுள்ள வயல்கள், நீரோடைகள், வாவிகளுக்குக்கிட்ட இந்த குண்டுகள் வெடித்து மரணங்கள் சம்பவிப்பதாகவும் அந்தச் செய்தி கூறுகிறது.

இதே ஆங்கில தினசரி தனது நேற்றைய பதிப்பின் முதல் பக்கத்தில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவரான பாதாள உலக குழுவைச் சேர்ந்தவரென கூறப்படும் ஒருவர் அவர் பதுங்கியிருந்த இடத்தில் பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் செய்ததில் கொல்லப்பட்டுவிட்டதாக ஒரு செய்தியையும் வெளியிட்டுள்ளது.

'தலவததுக்கொட சஜித்' என்றழைக்கப்படும் இந்த நபர் இராணுவ கொமாண்டோ பிரிவில் இருந்த தப்பியோடியவராம்.

பல கொலைகளில் இவர் சம்பந்தப்பட்டவராம். அதுமட்டுமல்ல இராணுவத்துக்கு தகவல் கொடுத்துவந்த ஒருவர் சமீபத்தில் மகரகமவில் சுட்டுக் கொலை செய்யப்பட்டதில் இவரும் சம்பந்தப்பட்டிருந்தவராம்.

இந்த ஆங்கில தினசரியும் இது போன்ற கொலைச்சம்பவங்களை புலிகளுடன் சம்பந்தப்படுத்தியே வெளியிடுவது வழக்கம். சில சமயங்களில் சில உண்மைகளையும் வெளியிடுகின்றார்கள்.

கைவிடப்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவங்களால் நேரும் மரணங்கள், உண்மையிலேயே கொலைச் சம்பவங்களா? தற்கொலை சம்பவங்களா? என்று பொலிஸாரால் தீர்மானிக்கமுடியாமல் இருக்கிறதாம்!

இந்தப் பத்திரிகை இச்சம்பவங்கள் இடம்பெற்றதாகக் குறிப்பிட்ட இடங்கள் யாவும், வடக்கு - கிழக்கைச் சேர்ந்தவை என்று சொல்லமுடியாது.

சமீபத்தில் அதாவது போர் நிறுத்தம் அமுலல் இருக்கும் காலத்தில், வடக்கில் இருந்து விடுமுறையில் வீடுதிரும்பிய இரண்டு இராணுவத்தினரிடமிருந்து விமான நிலையத்தில் வைத்து வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டதாகவும், அவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் செய்திகள் வெளிவந்தன.

விடுமுறையில் வீடு திரும்புபவர்களுக்கு எதற்காக வெடிகுண்டுகள்? தங்கள் குழந்தைகளுக்கு விளையாடக் கொடுக்கவா?

தகுதி பார்த்து படைக்கு ஆட்களை திரட்டாமல், தமிழ் பகுதியான வடக்கு-கிழக்கில்போய் எதையும் செய்யட்டும் அவர்கள் என்ன செய்தாலும் அழிவதும், அவஸ்தைப்படுவதும் தமிழர்கள் என்று தானே கண்ணை மூடிக்கொண்டு படை திரட்டி அனுப்பினார்கள்.

வினை விதைத்தவர்கள் வினையை அறுவடைசெய்யத்தொடங்கிவிட்டார்கள் என்றார் நண்பர்.

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்...

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பொலிஸார்மீது துப்பாக்கிச் சூடு நடாத்திய இரண்டு பேர் கைது!

வெள்ளவத்தைப் பொலிஸார் மீது துப்பாக்கி பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பாக இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் வெள்ளவத்தைச் செப்பல் லேனில், இரண்டு பொலிஸார் சுடப்பட்டிருந்தனர். இவ்விரு பொலிஸாரையும் சுட்டவர்கள் என்ற பெயரிலேயே குறித்த இரண்டு போரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.


செப்பல் வீதியில் வந்த இருவரும், பொலிஸாருடன் தர்க்கப்பட்டு இறுதியில் பொலிஸாரிடம் இருந்த கைத்துப்பாக்கியால் பொலிஸ்காரர்களைச் சுட்டனர். இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் களுவெலவோடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்

இதேவேளை, சம்பவத்தின் தொடர்ச்சியாக இடம்பொற்ற பொலிஸாரின் தேடுதலின் போது, 2ஆம் செப்பல் வீதியில் உள்ள வீடுடொன்றின் சீலிங்குக்குள் குறித்த இரண்டு போரும் ஒளித்திருந்தார்கள்

இவர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர், ஒருவர் யாழ்ப்பாணத்தையும், மற்றொருவர் கிளிநொச்சியையும் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. கடந்த பன்னிரண்டாம் திகதி இவர்கள் கொழும்பு வந்துள்ளனர் என்றும், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்றும் தமது வாக்குமூலத்தில் இவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (01)

## நாற்சந்தி



இரண்டு நாட்களாகச் சரியான தடிமல், காய்ச்சலால் மணியம் விட்டைவிட்டே வெளிக்கிடேல்லை...'- என்றார் விதானையார். 'கனகண்ணையும் வன்னிக்கு அவசர காரியமாய் போனதால், சந்திப்பக்கம் கலகலப்பில்லாமல் போய்விட்டது'- என்றார் சங்கக்கடை மனேஜர்...

காலமை வரும்போதே 'லொக்கு... லெக்கு' என்று இருமிக்கொண்டே மணியம் வருவதைக் கண்டதும், மனேஜர் கேட்டார்-

'ஏனப்பா... இந்தக் குளிரிலை எங்கை வெளிக்கிட்டாய்... இரண்டு நாள் வீட்டை கிடந்தா என்ன...'

'வீட்டை கிடந்தால், நாட்டு நடப்புத் தெரியாது. மனிசீன்ரை புறுபுறுப்பு மட்டும்தான் கேட்கும்...' என்றார் மணியம் சிரித்தபடி. அங்கை கனகண்ணையும் வாறார். 'எப்பண்ணை வன்னியாலை வந்தனீங்கள்... சொல்லாமல், பறையாமல் போட்டிங்களே...' என்றார் விதானையார்.

'திடீரென ஒரு அவசர அழைப்பு, போகவேண்டியதாய்ப் போச்சு...'

'ஓமோம், இவர் பெரிய ஆள்... அவருக்கு ஒரு அழைப்பு... ஆர் யசுஷி அகாஷியே அழைப்பு விடுத்தவர்?' என்றார் கிண்டலுடன் மணியம்.

'ஏன் ஜோர்ஜ் புஷ்ஷே அழைப்பு விடுக்கலாம்... இதெல்லாம் பெரிய விசயமே?' என்ற கனகர், விஷயம் தெரியுமே அகாஷி - அம்மையாருக்குக் கடுமையாத்தான் குடுத்திருக்கிறார்... ஆர்மிரேஜ் நெற்றியடி என்றால், அகாஷி மூக்கடியெல்லே குடுத்திருக்கிறார்... கனகாலத்திற்குப் பொறுக்க மாட்டார்களாம்...'- இது கனகர்.

'அகாஷி சொன்னாலும் அமெரிக்கா சொன்னாலும் அம்மையார் கேடடாத்தானே... இப்ப அவர் சோமவன்ஸ அமரசிங்க சொன்னாத்தான் கேட்பார் போலிருக்கே..!

'நீதான் தவறாப்புரிஞ்சு கொண்டிருக்கிறாய். இங்கையும் ஒரு அதிகாரப் போட்டி துவங்கப் போகுது... சந்திரிகாவா... சோமவன்ஸவா என்று...'

'என்னடாப்பா குழப்புகிறாய்...?'

'குழப்பம் இருந்தால்தான், ஜனநாயகம்... கூச்சல் இருந்தால்தான் அரசியல். இது தெரியேல்லையே உனக்கு...!

தெருவாசி

# பொலிசாருக்கு சம்பள உயர்வு பாஸ்கரலிங்கம் குழு ஆராயும்

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகளுக்கான சம்பள உயர்வு தொடர்பான முரண்பாடுகளை ஆராய்ந்து, தீர்வு காண்பதற்கான சிபார்சுகளை அளிப்பதற்காக நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி குழுவொன்றை நியமித்திருக்கிறார்.

நிதியமைச்சின் ஆலோசகர் பாஸ்கரலிங்கம் மற்றும் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பலரும் இந்தக் குழுவில் இடம்பெற்றிருப்பதாக நிதியமைசசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு கடந்த வரவு-செலவு திட்டத்தில் வழங்கப்பட்ட ரூபா 1250 சம்பள உயர்வு பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்படவில்லை. இது குறித்து எதிர்க்கட்சிகள் பலவும் கண்டனம் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கையுடனான பாதுகாப்பு...

இந்தியாவிடம் ஆயுதங்கள் வாங்காது போனால் வேறு எங்கேயாவது வாங்கலாம். இருந்த போதிலும் இந்தியா தற்பொழுது வழங்கிவரும் படைத்தரப்பு உதவிகளுக்கு மேலாக எதுவும் வழங்கும் என்று எண்ணமுடியாது.

இந்திய அரசாங்கத்தின் நிலை, இனப்பிரச்சினைக்கு ஒரு முடிவு வரவேண்டும் என்பதுதான். தமிழ் மக்களுக்கு ஒரு சாதகமான, சந்தோசம் தரக்கூடிய ஒப்பந்தமாக அமையவேண்டும். அவர்களுடைய பிரச்சினைகள் தீரவேண்டும் என்பது இந்தியாவின் ஒரு அடிப்படை கொள்கையாகும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது இலங்கை அரசாங்கமே தவிர இந்திய அரசாங்கம் அல்ல. உண்மையிலேயே, இந்தியா, இலங்கைத் தமிழருக்கு எதிராக நடந்துகொள்வது என்பது சந்தேகத் துக்குரிய விடயம் எனஅவர் மேலும் தெரிவித்தார்.

## தற்போதைய சூழலில் எமது...

கொண்டிருக்கிறார்கள்.

தென்னிலங்கை அரசியல் இழுபறியை முடிவுக்குக்கொண்டுவருவதற்கு அழுத்தமாக ஒருநிலைக்கு கொண்டுவருவதற்கு முன்வந்துள்ளது.

ஆனால், வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரை இங்கு மனிதாபிமானப் பிரச்சினை இங்கே மிகவும் அவசரமான வாழ்க்கைப்பிரச்சினை. மக்கள் மீள்குடியமர்த்தப்படவேண்டும். அவர்கள் நாளாந்த அடிப்படைத் தேவைகள் நீக்கப்படவேண்டும்.

எங்களுடைய மக்கள் போரை நேரடியாக முகங்கொடுத்தவர்கள். மக்களுக்கு அவசர மனிதாபிமான புனர்நிர்மாண பணிகள் மிக அவசரமாக செய்யவேண்டியிருப்பதால் அதற்கு சர்வதேச சமூகம் நிச்சயமாக ஆதரவுகொடுக்கும்.

எமது மக்களுடைய மனிதாபிமானப் பிரச்சினைகளை தீர்வுகாண்பதற்கூடாக சமாதான முன்னெடுப்புக்களில் எமது மக்கள் ஓரளவு நம்பிக்கை கொள்ளவைக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் இருக்கின்றன. இந்த வகையில் அவர்கள் அப்படியான ஒரு தீர்மானத்தை எடுப்பது வரவேற்கத்தக்கது.

இலங்கை அரசியல் தெளிவற்றிருக்காது, அதிகாரம் யார் கையில் இருக்கின்றது என்ற ஒரு குழப்ப நிலை இருக்கிறது. இந்தநிலையில் எமது மக்களின் மனிதாபிமானத் தேவைகளை பின்தள்ளமுடியாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.(03)

## கிணற்றில் வீழ்ந்து குடும்பப்பெண் மரணம்

தவறுதலாக கிணற்றில் வீழ்ந்து குடும்பப்பெண்ணொருவர் மரணமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று திருநெல்வேலி இராசவீதிப் பகுதியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் தியாகராஜா சரோஜினிதேவி (வயது 51) என்பவரே மரணமடைந்தார்.

மரணமடைந்த நபர் கிணற்றில் தண்ணீர் அள்ளுவதற்குச் சென்ற சமயமே கிணற்றில் தவறுதலாக வீழந்தார். இவரைக் காப்பாற்றுவதற்காக கிணற்றில் குதித்த அவரது மகன் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். உயிரிழந்த நிலையில் ஒப்படைக்கப்படட பெண்ணின் சடலம் மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. (ச)

## ஐரோப்புவுக்கான...

ழினி துணை அரசியல் பொறுப்பாளர் தங்கன் மற்றும் போராளிகள் பொது மக்கள் வழியனுப்பி வைத்தனர்.

நேற்றுமாலை கொழும்பு சென்ற இவர்கள் சுவீடன். ஜேர்மன், ஹொலண்ட், சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு சென்று அங்குள்ள அரசியல் தலைவர்களை சந்தித்து தற்போதைய அரசியல் நிலைமற்றும் சமாதான முயற்சியில் ஏற்பட்டுள்ள தடங்கள்கள் குறித்து விளக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் நோர்வே அனுசரணையாளரையும் சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடாத்தவுள்ளார். (03)

## அரசியல்....

ஏற்பட்டிருக்கும் அரசியல் முரண்பாடுகள் குறித்து நீண்டநேரமாக கிழக்கில் இயங்கும் தமிழ்கட்சிப் பிரமுகர்களுடன் நோர்வே தூதுவர் ஆராய்ந்தார்

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் தென்னிலங்கை அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணப்படும் என்றும், புலிகளுடன் அரசியல் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தனர்.

## சிக்கலான...

கடைப்பிடித்து வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில், அங்கத்துவம் வகித்து அர்ப்பணிப்புடன் பணியாற்றும் டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகளின் பங்கு மிகவும் பெருமிதத்தைத் தருகின்றது.

சர்வதேச சமூகம் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குத் தொடர்ந்து உதவிகளை வழங்க வேண்டும் என்றும் கோபி அனான் கேட்டிருப்பதாக ஐ.நா. அலுவலகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# கூட்டணியின் செயற்குழு பெப்ரவரி 01 இல் கூடும்!

## ஆனந்தசங்கரி அழைப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக்கூட்டம் பெப்ரவரி முதலாம் திகதி காலை 10.00 மணிக்கு கட்சியின் தலைமைக் காரியாலத்தில் இடம்பெறவுள்ளது.

கட்சியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி தலைமையில் இக்கூட்டம் நடைபெறவிருப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் மற்றும் நிர்வாக செயலாளர் ரவிராஜ் ஆகியோர் கையொப்பமிட்டு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த நவம்பர் மாதம் 30 திகதி நடைபெற்ற மத்தியகுழு செயற்குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்டு, அன்று பரிசீலனைக்கு எடுக்கப்படாத விடயங்கள் இந்தக் கூட்டதில் ஆராயப்படவுள்ளது. இந்தக் கூட்டதில் கலந்துகொள்ளுமாறு மத்திய செயற்குழுவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக்கூட்டமானது தமது விருப்பத்தின் பேரிலும், தமது தலைமையின் கீழே இடம்பெறுவதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரான வி.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

# தேர்தல் சீர்திருத்த சிபார்சு ஜே.வி.பியால் நிராகரிப்பு!

நாடாளுமன்ற தேர்தல் தெரிவுக் குழுவினால் சமர்பிக்கப்பட்ட புதிய தேர்தலுக்கான சிபாரிசுகளை ஜே.வி.பி நிராகரித்துள்ளது.

இது சம்பந்தமாக ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினரான நந்தன குணதிலக தற்போதுள்ள தேர்தல் முறையை மாற்றியமைப்பதற்கு சிபார்சு செய்யப்பட்ட புதிய யோசனைகளுக்கு தமது கட்சி உடன்பாடல்ல என்று தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கரஸ், ஜாதிக சமுகி பெரமுன ஆகியன புதிய யோசனையை வரவேற்றுள்ளதோடு இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி என்பன இதுவரை எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை

தமிழர் கூட்டமைப்பினரும் புதிய யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் புதிய சிபார்சுகள், சிறுபான்மைக்கட்சிகளை பாதிக்ககூடியதாக அமைந்துள்ளது என்று, தமிழர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

## தேசிய....

கொள்ளாது இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படுமனால் அது எந்த வகையிலும் தீர்வாக அமையாது எனக் குறிப்பிட்டார்.

இரண்டு தலைவர்களுக்கும் தற்போதைய நாட்டு நிலவரம் குறித்தும் அவர் பேச்சு நடத்தினார்.

## பேச்சை....

துள்ளது.

இந்த விடயம் குறித்த கலந்துரையாடல் இன்று மாலை 3.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்திலுள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளுமாறு மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

## பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக...

தகவல் வெளியிடுகையில்-

இந்தத் தேடுதலுக்கு தலைமை வகித்த பொலிஸ் அதிகாரியான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல மற்றும் அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா, பொலிஸ் சேவைகள் ஆணைக் குழுவிடம் சிபார்சு செய்துள்ளார்.

இந்த விடயத்தில் தன்னிச்சையான முடிவைத் தன்னால் எடுக்க முடியாது என்றும், சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கான சிபார்சுகளை பொலிஸ் சேவை ஆணைக் குழுவுக்கு தான் அனுப்பியிருப்பதாக பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

அத்துடன் இந்த விடயத்தை தாம் சட்டமா அதிபருடன் கலந்தாலோசித்ததாகவும் பொலிஸ் மா அதிபர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துருகிரிய விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையிலேயே இந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

வாசித்தீர்களா?
கோபுவின்,
பத்திரிகைப்பணியில்
அரை நூற்றாண்டு
ஈழமண்ணில் ஓர் இந்தியச்சிறை
அந்த ஒரு உயிர்தானா உயிர்?
பிரதி 150 ரூபாய்
(சி-2178)
யாழ்.நகரில் அனைத்துப் புத்தக நிலையங்களிலும்
அறிவு அமுது பொத்தக நிலையங்களிலும் கிடைக்கும்.

விளையாட்டு உபகரண விற்பனையாளர்களே!!!
GOLD CUP (கோல்ட் கப்) MIKASA (மிக்காசா) ASCOT (அஸ்கொட்) ROBINSON (றொபின்சின்) C.A (சீ.ஏ) ஆகிய BRAND NAME (வியாபாரப் பெயர்) உடைய விளையாட்டு உபகரணங்களை மொத்தமாக பெற்றுக்கொள்ளமுடியும் என்பதனை அறியத்தருகின்றோம்.
ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்
YONEX MULTI PALACE
76, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P. 0777166894
(சி-2177)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களரல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.